உ

திருக்கச்சித் தலவரலாறு

ஆசிரியர்:

...ஸ். பெருமாள்

(...கையாளர்-எழுத்தாளர்)

ஓ 23:38.2112.k
N65
162884

ஸ்ரீசக்தி டிம்பர்ஸ்,

222-B, காந்திரோடு,

(தேரடி சமீபம்)

காஞ்சிபுரம்.

எங்களிடம்

இருள், கரிமருது, வெண்தேக்கு, வயநா, மைசூர்தேக்கு, ரங்கோன் தேக்கு, மாம்பலகைகள், வெண்தேக்கு பலகைகள்

ஆகியவைகள் எல்லா வித அளவுகளிலும் விலை மலிவாக கிடைக்கும்.

★

அன்பர்கள் ஆதரிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

உ

திருக்கச்சித் தலவரலாறு

(வியாழக் கிழமைக்குரிய ஸ்ரீகாயாரோகணம்
பிற்சேர்க்கைகளுடன்)

ஆசிரியர்:

சீ. ஈ. எஸ். பெருமாள்

(பத்திரிகையாளர்-எழுத்தாளர்)

வெளியீடு:

முருகவேள் நிலையம்,

74, புதுப்பாளையம் தெரு,

பிள்ளையார்பாளையம்,

காஞ்சிபுரம்.

[உரிமை பதிவு
பெற்றது]

விலை: 50 காசு.

முதற் பதிப்பு: மே 1965.

உரிமை ஆசிரியருக்கே.

பத்மா பிரஸ்,
காந்திரோடு,
காஞ்சிபுரம்.
போன்: 61.

சமர்ப்பணம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாகிய ஜகத்குரு ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகளுக்கும், இளைய ஸ்வாமிகளாகிய ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி அவர்களுக்கும்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு

ஸ்ரீசங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம்

காஞ்சிபுரம்

முகாம்: சந்தவேளூர் சீல் தேதி: 23—2—1965

உலகனைத்திற்கும் தாயாகவும் காமகோடி பீட ஸ்தானத்தில் அருவமாகவும், உருவமாகவும் விளங்கி வருகின்ருள் அன்னை காமாக்ஷிதேவி. அவ்வம்மையின் க்ஷேத்திரமாகிய காஞ்சி நகரத்தில் பூத உடலோடு (காயத்தோடு) முக்தியளிக்கவல்ல ஸ்ரீ காயா ரோஹணேச்வரர் ஆலயம் அமைந்துள்ளது. அவ்வாலயத்தின் தல வரலாற்றை சிறந்த பக்தரும் பல க்ஷேத்திர வரலாறுகளை பத்திரிகைகளில் வெளியிட்டு வருபவருமான ஸ்ரீ.ஸி. ஈ. எஸ். பெருமாள் (எழுத்தாளர்-பத்திரிகையாளர்) பல புராணங்களின் துணைகொண்டு விரிவான முறையில் பல கோள்கள் காட்டி எழுதியிருப்பதை யறிந்து மிகவும் சந்தோஷிக்கிருேம்.

இந்தத் தல வரலாற்றை வெளிக்கொணர உதவியாகவிருந்த இவ்வாலய தருமகர்த்தா ஸ்ரீ கன்னியப்ப முதலியாரது தொண்டையும் பாராட்டி, இந்நூலைப் படிப்பவர்களும், ஆலயத்தில் வழிபாடு செய்கின்றவர்களும், ஸ்ரீ காயாரோஹணர் அருளைப்பெற ஆசீர்வதிக்கின்ருேம்.

நாராயண ஸ்மரணை.

உ

சிவமயம்

திருவம்பலம் உடையார் துணை

தொண்டை மண்டலம்

ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் ஆதீனம்

குரு மகா சந்நிதானம்

சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

பெரியகாஞ்சிபுரம், செங்கற்பட்டுமாவட்டம், தமிழ்நாடு.

வாழ்த்துரை

அன்பர் திரு. சீ. ஈ. எஸ். பெருமாள் (பத்திரிகையாளர்-எழுத்தாளர்) திருக்கச்சிப்பதியில் உள்ள பலபல சிவதலங்களுள் ஒன்றாய காயாரோகணத்தைக் குறித்து ஆய்ந்து வரலாற்று நூல் எழுதியுள்ளார். அது பலரும் வியக்கத் தக்கது. வரலாறு பலரால் எழுதப்பட்டதைக் குறித்து எவரும் எழுதிவிடலாம். வரலாறு தெரியாத ஒன்றற்கு எழுதுவது வியப்பே. சீலஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களது ஆணையைப் போற்றிக் காத்த சிறப்பால் இவ்வரலாறு நன்கு அமைந்திருக்கின்றது.

காயாரோகணம் என்றதன் பொருளாக இருவேறு காஞ்சிப் புராணப்பாடல்கள் அறிவிப்பவை இவை: திருமாலும் நான்முகனு மாகிய 'இருவரும் ஒருங்கே இறவருங்காலை எந்தையே ஒடுக்கி ஆங்கு அவர்தம் உருவம் மீது ஏற்றிக்கோடலாற் காயாரோகணப் பெயர் அதற்கு உறும்' (மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிய காஞ்சிப் புராணம். காயா. 6) ஒரு கற்பாந்தத்திலே உயிர்கள் கலங்கி வருந்தி வாடப் பார்த்து அஞ்சி அவ்விருவரும் காம பீடம்

சார்ந்து கூவிள மரத்தின் பாலும் பலாசு மரத்தின் பாங்கும் சங்க தீர்த்தம் கமண்டல தீர்த்தம் தொட்டு எடுத்துச் சிவபரம் பொருளை வழிபட்டனர். அவ்விருவர் செய்த நோன்பிற்கும் அன்பிற்கும் இரங்கிய இறைவன் 'அஞ்சலிர்' என்று கூறி அவ்விரு வரையும் தோள்மேல் ஏற்றிக் கொண்டான். அப்போதுண்டான மலைத்திரிவும், கடற்புரட்சியும், உலகழிவும், உயிரொடுக்கமும் நோக்கி விம்மிதம் உற்றனர்.

அத்தகைய கற்பாந்த காலம் கழிந்ததும், உயிர்க்குயிராயும் உணர்விற்குணர்வாயும் துன்பம் துடைத்து இன்பம் அளித்துத வும் பரம் பொருள் தன் தோளினின்றும் அவ்விருவரையும் இறக்கி விட்டது. 'இறைவர் இவ்வாறு தோளில் ஏற்றலால்...... காயாரோகணப் பெயர் பூண்டன்று' (ஸ்ரீகச்சியப்ப முனிவர் அருளிய காஞ்சிப் புராணம். பக். 161-167.)

இவ்விரு பொருளினும் வேறொரு பொருளும் தொன்மைய தாயுண்டு. அதனை ஷை சுவாமிகளின் ஸ்ரீமுகத்திற் காண்க. 'கூண்டோடே கயிலாசம் போனான்' என்னும் உலக வசனமும் உண்டு.

ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகளும் ஸ்ரீகழற்றறிவார் நாயனாரும் திருக்கயிலாயம் எழுந்தருளிய உண்மை வரலாறும் இதை ஒட்டி யுணரத்தக்கதே. உடல் (1) ஊன தேகம் (2) ஞானதேகம் என்று இரு வகைத்து. ஊனதேகம் ஸ்தூலம். அதனுள் இருக்கும் உயிருக்குச் சூக்ஷ்ம தேகம், காரண தேகம் (பர தேகம்) என்று வேறும் இரண்டுண்டு இம் மூன்றற்கும் வேறானது ஞான தேகம் உயிர்க்குப் பிறவாத பேரின்பம் உறுங் காலத்திலும் ஒழியாது இருப்பது ஞான தேகம் ஒன்று மட்டுமே முற்கூறிய மூன்று தேகமும் ஒழிவனவேயாகும். ஆதலின் ஞான தேகத்தைக், 'கழியாவுடல்' என்பர். எனவே கழியும் உடலே ஏனைய உடம்பெல்லாம் என்பதுறுதியாயிற்று. முத்திபெறும் உயிர்க்கு அம்மூன்றுடலும் இருந்தால், அது பரமுத்தியும் அன்று; பதமுத்தியும் அன்று.

டி நாயனர் இருவரும் இங்கு இருக்கும் போதும் ஞான தேசிகளாகவே விளங்கினர். திருக்கயிலைக்குச் சென்ற போது மனக் குதிரையையும் ஞான வாரணத்தையும் ஊர்ந்து சென்றருளினர். சிவமந்திரம் கேட்ட குதிரை அது 'மனத்தொடு பரியும் முன் செல விட்டார்'-என்றது கொண்டு, உலகப் பரியாகக் கொள்ளலாகாது. இம் மண்ணுலகக் குதிரையும் யானையும் திருக்கயிலைக்குச் செல்லவல்லனவோ? இம்மண்ணுலக யானைச் செல்லவல்லதாயின், 'ஒன்று சிந்தைநம் ஊரானை உம்பர் வெள்ளானையின் உடனேற்றிச் சென்று, கொண்டு இங்கு வாரும்' என்னும் அருளாணைப் பிறப்பித்தது எற்றுக்கு? அழைக்கப் பெறாத அரசர் தம் ஊனக்குதிரையை ஞானக் குதிரையாக்கிக் கொள்ளற் பொருட்டே சிவ மந்திரத்தை அதன் செவியில் ஏற்றினர். ஏறிற்று. இரு விசும்பு எழப் பாய்ந்தது. அம் மந்திரத்தை ஓதுவதன் முன் நிலத்தில் ஓடியது. ஓதியது முதல் விசும்பிற் பாய்ந்து ஓடிற்று. உலகோர்தம் கட்புலப்படும் எல்லை எதிர் விசும்பினிற் கண்டு பின் கண்டிலர்.

'களையா வுடலோடும் சேரமான் ஆரூரன்
விளையா மதம் மாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம் நின் ஆடரங்கே'

(திருவிசைப்பா. 189)

இதிற் குறித்தது களையும் உடலாகிய ஊனுடம்பு அன்று. ஞானதேகமே களையாவுடல். அதைக் கூண்டு என்னும் சொல்லால் குறித்தது அப்பழமொழி.

இச்சீரிய தலத்தின் வரலாற்றைத் தனது கூரிய மதியால் ஆராய்ந்து எழுதி நாட்டுக்கு நல்கிய திரு. பெருமாளைப் பெருமாள் இனிது காப்பாராக.

வாழ்க இனிது இந்நூலை வரைந்த அன்பர்.

சிவம்
25—2—'65

M. BHAKTAVATSALAM
CHIEF MINISTER

FORT ST. GEORGE
MADRAS.

9-5-1965.

நமது நாடு திருத்தலங்கள் நிறைந்த நாடு. நமது மக்களுக்குச் சமய உணர்ச்சியும் அதிகம். ஆயினும் ஒவ்வொரு திருத்தலத்துக்கும் உள்ள சிறப்புகளை மக்கள் போதிய அளவில் அறியாமல் இருப்பது பெரும் குறையே ஆகும். இக்குறையைப் போக்கும் முறையில் தலவரலாறுகள் தொகுத்து வெளியிடப்படும் முயற்சிகள் போற்றத் தக்கவை.

திரு சீ. ஈ. எஸ். பெருமாள் அவர்களால் எழுதப்பட்ட திருக்கச்சித் தல வரலாறு, காஞ்சியம்பதியின் சிறப்பினையும், ஆலய வழிபாடு முறைகள், கட்டடக் கலை, சரித்திரச் சான்றுகள் ஆகியவைகளையும் விளக்குகிறது. விரிவான முறையில் தல வரலாறு வெளிவர இது ஊக்கமளிக்கும் என்று நம்புகிறேன். ஆசிரியரின் இந்த முயற்சிக்கு என் வாழ்த்துக்கள்.

(ஒப்பம்) பக்தவத்சலம்.

திரு. சீ. ஈ. எஸ். பெருமாள்,
பிள்ளையார்பாளையம்,
காஞ்சிபுரம்.

9

ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.,
ஆசிரியர்: ''திருக்கோயில்''

சென்னை,
3—5—65.

ஓம்

அணிந்துரை

(வெண்பா)

அன்புயர்சீ. ஈ.எஸ். பெருமாள், அரியகச்சி
இன்பத் தலவரலா றென்றொருநூல்—நன்றுயர்நம்
சங்கரா சார்ய சுவாமிகள்தம் வாழ்த்துரையோ
டிங்கெழுதித் தந்தான் இனிது.

காஞ்சிப் பெரிய கடவுளருள் மாமுனிவர்
வாஞ்சித்தே ஆசி மகிழ்ந்தளிப்பத்—தீஞ்சுவைநூல்
நற்காயா ரோகணம் பற்றி நனிவரைந்தான்
பொற்புமிக வாழ்க!நலம் பூத்து.

(ஒப்பம்) ந. ரா. முருகவேள்.
3—5—65.

சித்தாந்த சிகாமணி, நாவலர்:
க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ.,எல்.டி.,
தலைமை ஆசிரியர்,
பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி.

காஞ்சிபுரம்,
19—5—'65.

சிறப்பு நல்லுரை

எல்லா நன்மைகளும் சிவபூஜையால் வரும் என்பது வேதாகமங்களின் துணிபு. உலகத்தாரும் தங்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் எல்லாம்தங்கள் பூஜாபலன் என்றும், துன்பங்கள் நேரின் அவை தங்கள் கர்மத்தின் பயன் என்றும் சொல்லுவர் பூஜா என்ற சொல் கர்மத்தின் பூர்த்தி-ஞானத்தின் தோற்றம் என்னும் பொருளைக் குறிக்கும். அதாவது சிவபூஜை, கர்மங்களினின்றும் தம் மனத்தை விலக்கி, ஞான நெறியில் உயத்தற்குத் துணை நிற்கும் செயல் என்பது பொருள்.

இத்தகைய சிவபூஜையின் சிறப்பை பல தளிகளாலும் தெளிய விளக்கும் தலம் காஞ்சித்தலம் ஒன்றே ஆகும். காஞ்சியிலுள்ள பல தளிகளும் பரமசிவனை, தேவர்களும் முனிவர்களும் மற்றும் பல்லோரும் பூஜித்துப் பலன் பெற்ற வரலாறுகளையே விளக்குவனவாக உள்ளன. அவற்றுள் திருவேகம்பம், கச்சபேசம், காயாரோகணம் என்ற மூன்றும் சிறந்த தலங்கள் என்று காஞ்சிப் புராணம் பேசுகின்றது.

திருவேகம்பம் மும்மூர்த்திகளுக்கும் தாயாகவுள்ள இலளிதாதேவி பரமேசுவரனைப் பூஜித்த தலம் மும் மூர்த்திகளும் அம்மையைப் பின்பற்றிப் பெருமானைப்பூஜித்துள்ளார்கள் அங்கு இறைவன் வேதவடிவாக உள்ள மாவடியில் எழுந்தருளியுளன். கச்ச பேசத்தில் கூர்மாவதாரம் எடுத்த திருமாலும் சரஸ்வதியும் பூஜித்து அருள் பெற்றனர். அங்கு இறைவன் எழுந்தருளும் இடம் முருக்கடி, காயாரோகணத்தில் திருமகளும் குருபகவானும் எமதருமனும் பூஜித்து வரம் பெற்றனர். அங்கு

இறைவன் எழுந்தருள்வது வில்வ மரத்து அடி. இம் மூன்று இடங்களும் முதல்வன் உலகத்திற்குப் பரம ஆதார நிமித்த காரணனாக இருந்து, அந்தமாகவும் ஆதியாகவும் விளங்குகின்றான் என்னும் உபநிடத உண்மையை விளக்குவனவாக அமைந்துள்ளன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மூர்த்திகளுடைய பெருமையையும், அம்மூர்த்திகளுக்கு இடமாகவுள்ள காஞ்சிமா நகரத்தின் மாண்பையும், தீர்த்தங்களின் சிறப்பையும் திரு. சீ. ஈ. எஸ். பெருமாள் அவர்கள் எழுதிய, ‘திருக்கச்சித் தலவரலாறு என்ற இந்நூல், இனிய, எளிய, பழகுதமிழில் விளக்குகின்றது. வரலாறு, இலக்கியம், புராணம் என்னும் மூன்றும் பற்றிய சான்றுகள் கொடுக்கப்பட்டு இருப்பது, நூலின் உபயோகத்தை அதிகப் படுத்துகின்றது.

இந்த நூல் கற்போர்க்கு உணர்வும், இன்பமும், பக்தியும் வளரும்படிச் செய்யும் என்பதில் ஐயமில்லை. இதனை எழுதி உபகரிக்கும் ஆசிரியரும், கற்றுப் பயன் கொள்ளும் நன்மக்களும் இறைவனுடைய திருவருளால் எல்லா நலன்களும் பெற வேண்டும் என்று அவன்றன் பொன்னார் திருவடிகளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

(ஒப்பம்) க. வச்சிரவேல் முதலியார்,
19—5-65.

ஆசிரியர் உரை

'ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்து இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே'.

—திருமூலர் திருமந்திரம்.

மனித வாழ்வு துன்பம் நிறைந்தது. நிறைந்த துன்பம் நேர் வந்துற்ற காலத்து, துணைநின்று துன்பம் துடைத்து அருள்பவன் ஆண்டவன் ஒருவனே. அவ்வாண்டவனைப் பற்றிய எண்ணங் களை மக்களிடை எழுப்புவான் வேண்டியே, ஆலயங்கள் ஆங்காங்கே தோன்றியுள்ளன. அவ்வாலயங்கள் மலிந்து காணப்படும் மகிமை மிகு தலம் திருக்கச்சியம்பதியாகும். அப்பதியில், சிவகுமாரர்கள், புருஷார்த்தங்கள், யுகங்கள், வேதங்கள், திக்குப் பாலகர்கள், நவக்கிரகங்கள், அமரர்கள், அசுரர்கள், விஷ்ணு பரிவாரங்கள், மகரிஷிகள், சப்த ரிஷிகள், யோகாசாரியர்கள் முதலானோர் வழிபட்டு முத்தியடைந்த திருத்தலங்கள் அனந்தம். அத்திருத் தலங்களுள், தேவகுரு வழிபட்ட ஸ்ரீ காயாரோகணமும் ஒன்று. அதன் வரலாற்றினை ஆராய்ந்து எழுதும் வாய்ப்புக் கிடைத்தது, இம்மையில் யான் அடைந்த பேறே ஆகும்.

ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயில், ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோயில் மற்றும் பல கோயில் வரலாற்று நூல்கள் பின்னர் வெளியிட இருப்பதால், தினமணிச் சுடரில் வெளியான எனது கட்டுரைகளை நலம் நோக்கி இந்நூலுள் பிற்சேர்க்கைகளாக இணைத்திருக்கிறேன். அனுமதித்த தினமணிச் சுடர் ஆசிரியர் அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றி உரியது.

'திருக்கச்சித் தல வரலாறு' என்ற இந்நூலைச் சமைத்திடும் ஆற்றலை யானறியேன். எனினும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பெரிய வர்கள், இளஞாயிறு அனைய ஸ்ரீபுதுப்பெரியவர்கள் ஆகியோரின்

அளப்பரிய கருணை, அந்நிலைக்கு என்னை ஆளாக்கி ஆட்கொண்டது. அப்பெரியவர்கள் இந்நூலுக்கு ஆசி வழங்கி ஆசீர்வதித்து தெய்வமணம் கமழச் செய்திருக்கிறார்கள். நடமாடும் தெய்வங்களாக—ஞான வள்ளல்களாக விளங்கும் அப்பெரியவர்கள் இருவருக்கும் இந்நூலைச் சமர்ப்பணம் செய்து, அவ்விரு பெரியவர்களையும் என் உளக்கோயிலில் வைத்து வணங்குகிறேன்.

ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், பழுத்த ஞான வலிமையும் கொண்டு தமிழ் ஞானப் பிரகாசராய்த் திகழும் காஞ்சி ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், என்பால் அருள் சொரிந்து நீண்ட வாழ்த்துரையினை நல்கி இருக்கிறார்கள். என் நெஞ்சினுள்ளே பிரகாசிக்கும் ஸ்ரீ ஞானப் பிரகாசரை வணங்குகிறேன்.

சேக்கிழார் மரபில் தோன்றிய செழுந்தமிழராகவும், பழுத்த அரசியல் ஞானமும் தன்னலமற்ற தியாக உணர்வும் கொண்ட தமிழக முதலமைச்சராகவும் விளங்கும் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் சிறப்புரை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவன் ஆவேன்.

இந்து மத அறநிலையத் துறையின் அருமை உணர்ந்து, சமயத்துறைக்குச் சீரிய தொண்டாற்றி வரும் பண்பாளர், என் அன்புக்கு உரிய 'திருக்கோயில்' ஆசிரியர் திரு ந. ரா. முருகவேள் அவர்கள் ஆவார்கள். அணிந்துரை தந்த அவர்களுக்கு என் நன்றி என்றென்றும் உரியது

மெய்ந்நெறி ஒழுக்கங்களில் சிறந்த புனித மிகு நல்லாசிரியராய் விளங்கும் சித்தாந்த ஞானபானு திரு க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் என் பொருட்டுத் தந்த சிறப்புரைக்கு நான் மிகவும் கடமைப்பட்டவன்.

தல வரலாறு எழுதச் சில தகவல்களை உதவிய நம் அன்புக்குரிய டிரஸ்டி திரு. வி. கன்னியப்ப முதலியார் அவர்கள், இந்நூலின் மதிப்பு உணர்ந்து விளம்பரம் நல்கி உதவிய பேரன்பு மிக்க விளம்பரதாரர்கள், நன்முறையில் அச்சிட்டுத் தந்த

பத்மா பிரஸ் உரிமையாளர் திரு. வி. மோகனம் அவர்கள், புகைப்படம் எடுத்துக் கொடுத்த கந்தவேள் ஸ்டுடியோ உரிமையாளர் திரு. தேவராஜ நாயுடு அவர்கள், கல்வெட்டு ஆராய்ச்சிக்கு உதவிய கச்சிச் செந்தமிழ்க் கல்லூரி பிரின்சிபால் திரு. கோ. பாலசுந்தர நாயகர், எம்.ஏ., அவர்கள், திருத்தம் செய்துதவிய காஞ்சி பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. கோ. இராமச்சந்திரன், எம்.ஏ., அவர்கள், ஸ்ரீ ஆசார்யாள் பிளாக் கொடுத்த கருணை மிகு 'கல்கி' காரியாலயத்தார் அவர்கள், அதிலும் குறிப்பாக திரு. ஆத்மநாதன் (கல்கி) அவர்கள், திரு. ஒ. ஈ. செல்வராஜ் (கல்கி) அவர்கள், மற்றும் என்னைப் பல்லாற்றானும் தூண்டி ஊக்குவித்த பேராசிரியர்கள், பக்தர் பெருமக்கள், நண்பர்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

நலமே விளைக!

அன்புள்ள,

காஞ்சிபுரம்,
20—5—'65.

(ஒப்பம்) சீ. ஈ. எஸ். பெருமாள்,
(பத்திரிகையாளர்-எழுத்தாளர்)
ஆக்கியோன்.

குறிப்பு: இந்நூலின் முகப்பை அலங்கரிப்பவர் தல குருபகவான்.

15

பொருளடக்கம்

I. நகரச் சிறப்பு

ஸ்ரீ காயாரோகணேஸ்வரர் கோயில்

தல மகிமையும் வரலாறும்

வழிபாடு செய்தவரும் வழிபட்ட முறைமையும்

குரு—ஒரு விளக்கம்

கட்டடக் கலை

இலக்கிய, சரித்திரச் சான்றுகள்

குரு பெயர்ச்சி வைபவம்

காயாரோகணப் படலம்

II. பிற்சேர்க்கைகள்:

ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயில்

ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோயில்

உ

நகரச் சிறப்பு

சீரும் சிறப்பும் மிக்க தெண்ணீர் வயற்றொண்டை நன்னாட்டின் திலகமாய் விளங்குவது காஞ்சிமா நகரம் ஆகும். தேசமெல்லாம் புகழ்ந்தாடும் இக் கச்சியம்பதியை, 'நகரேஷு காஞ்சி' என்றும், 'முத்திதரும் நகரேழுள் முக்கியமாம் கச்சி' என்றும், 'கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகர்' என்றும், 'கச்சி மூதூர்' என்றும், 'விழவு மலி மூதூர்' என்றும் புலவர்பெருமக்கள் உச்சிமேல் வைத்துக் கொண்டாடுகின்றனர். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூவகைச் சிறப்புக்களைத் தருதலோடு, அற நூல்கள் வலியுறுத்தும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பேறுகளுள் முத்திச் செல்வத்தையே முந்தித் தருவதாய் விளங்குகிறது.

உலகெலாம் புரக்கும் உத்தமியாம் எம் அம்பிகையே உவந்து வந்து, உலப்பிலா ஆனந்தத்தைப் பெருக்கி, இரு நாழி நெல் மூலம் முப்பத்து இரண்டு அறம் வளர்த்த பெருமை காஞ்சிக்கு உண்டு. அன்னை ஸ்ரீ காமாட்சியின் அளப்பரிய கருணையினால், ஒன்றுமறியாத ஊமையையும் உயர் கவியாய் விளங்கச் செய்த புண்ணியத் தலம். அறவண அடிகள்பால் விழைந்து வந்து அவர் அருள் பெற்று, அமுத சுரபி மூலம் அரும்பசி போக்கிய மணிமேகலையின் மனத்தைக் கவர்ந்ததும் காஞ்சி. அம்மட்டோ? இந்நகரின்

பெருமை, அயல் நாட்டினரையும் நனி கவர்ந்து இருக்கிறது. கி. பி ஏழாம் நூற்றுண்டில் இந்தியா வந்திருந்த யுவான் சுவாங் (Hiuen Thsang) என்ற சீன யாத்ரீகர், காஞ்சியில் தாம் கண்டனவற்றை விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். 'காஞ்சிக்கு இணையான நகரமைப்பு வேறு எந்நகரிலும் இல்லை' — என்று 1915-ல் கெட்டிஸ் (Geddes) என்ற ஆங்கிலேயர் கூறியுள்ளார்.

அன்று சமயங்களின் நிலைக்களனுகத் திகழ்ந்து, சைவம், வைணவம், பௌத்தம், ஜைனம் ஆகிய நாற்சமயங்களும் தழைத்தோங்க நின்றது. இங்கிருந்து வடநாடு சென்ற நாலந்தா பல்கலைக் கழகத் தலைவரான தர்மபாலர், அப் பல்கலைக் கழகத்துள் தலை சிறந்த பேராசிரியராய் விளங்கிய தின்னுகர், போதி தர்மர், திருக்குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர், பொய்கை ஆழ்வார், தூப்புல் வேதாந்த தேசிகர், கருநாடக இசை ஒளி சியாமா சாஸ்திரிகள், இசைக் களஞ்சியம் நாயனுப் பிள்ளை (சிறந்த ராஜ தந்திரி சாணக் கியரும் இந்நகரினரே என்பர்)முதலான அறிஞர் பெருமக்களை ஈன்றெடுத்த காஞ்சி, இன்றும் தன் பெருமை குன்றுமல் குலையாமல் காத்துவருவதை யாரேமறுக்க வல்லார்!

படைப்புக் கடவுளாகிய பிரமதேவனே முன்வந்து வழிபாடு நிகழ்த்திப் பேறுபெற்ற பெருமை மிகு காஞ்சி (க— பிரமதேவன்; அஞ்சி — அஞ்சித்தல்), பஞ்சபூதத் தலங்களுள் சக்தித்தன்மை வாய்ந்த பிருதிவி (மண்) தலமாகவும்— ஸ்ரீசக்கர சொரூபமாகவும் அமைந்துள்ளதென ஆன்றோர் பணித்து இருக்கின்றனர். இங்கே, ஆண்டவனுடைய குணனுபவங்களைக் கண்டுணர்ந்த ஆழ்வார்கள் அலங்கரித்த தெய்வத் திருப்பதிகளும், ஆருக்காதலால் கசிந்து கண்ணீர் மல்கிய அடியார்களால் பாடல்பெற்ற திருத்தலங்களும் அனந்தம். பல்லவர், சோழர், விஜயநகரப் பேரரசர் மற்றும்

பலரின் தெய்வத் திருப்பணிகளால், கலைப் பெருக்கையும் அருட்பெருக்கையும் பாயவிட்டு, கோயில் மலிந்த நகரமாய்—வற்றாத கருணைக்குப் பாத்திரமாய்—நிற்கும் காஞ்சியின் அருமை அளவிட்டுக் கூறற்பாற்றோ!

இத்தகு திருநகர், செங்கற்பட்டு மாவட்டத்துப் பெருநகர் ஆகும். சென்னைக்குத் தென்மேற்கில் நாற்பத்தைந்து மைல் தூரத்தில் அமைந்துள்ள இந் நகருக்கு பஸ், புகை வண்டி போக்குவரத்து வசதிகள் யாவும் உண்டு. ஒரு முதல் தர (I Grade) நகராட்சியினரால் நிர்வகிக்கப் பட்டுவரும் கவின் காஞ்சியை—காவியம் கண்ட ஓவியக் காஞ்சியை—கண்ணாரக் கண்டு இன்புறல் அவசியமேயன்றோ!

2. தேவ குரு வழிபட்ட

ஸ்ரீ காயாரோகணேஸ்வரர் கோயில்

செங்குந்தர்குல மக்களின் இருப்பிடமான பிள்ளையார் பாளையம், கைத்தறி நெசவுப் பட்டாடைக்கும் கலைத் திறனுக்கும் பெயர் பெற்றது. மேலும், திராவிட மாபாடிய கருத்தர் மாதவச் சிவஞான சுவாமிகள் தங்கியிருந்து மாபாடியம் வகுத்த இடம்; அவர்தம் மாணவர்கள் கச்சியப்ப முனிவர், சிதம்பர முனிவர், சரவண பத்தர் முதலியவர்கள் வதிந்து அருட்பணி இயற்றிய ஞான பூமி.

இங்கே ஞானசம்பந்தரின் உளமுருக்கும் நற்பாடல் கேட்டு நைந்துருகிய திருமால், சிவசாரூபமாய் எழுந்தருளிய திருமேற்றளி நாதர், ஓத உருகீசுவரர், சனிபகவான் பூஜித்து ஆனந்த வடிவம் பெற்ற மகா ஆனந்த உருத்திரேஸ்வரர், பூசலார் நாயனாரின் மனத்தகத்தே கோயில் கொண்டு எழுந்தருளிய கயிலாசநாதர், அநேகதங்காவதேஸ்வரர், சோளீஸ்வரர், சித்தீஸ்வரர், சிதம்பரீஸ்வரர் இன்னபிற விசேடமூர்த்தங்களின் மகிமை பொருந்திய இப்பகுதியில், குரு பகவான் (வியாழப் புத்தேள்) உவந்து வந்து வழிபாடு நிகழ்த்திய பெருமைமிகு தலம் திருக்காயாரோகணேஸ்வரர் கோயில் ஆகும். புராணங்களில் பெரிதும் போற்றப்படும் பலதளிகளுள் திருக்கச்சி ஏகம்பம், திருக்கச்சிக் கச்சாலை என்கிற கச்சபேசம், திருக்காயாரோகணம் என்பவையே சிறப்பாகப் பேசப்படுகின்றன. அதற்குக் காரணம் முறையே, பார்வதி, சரஸ்வதி, இலக்குமி ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்றமையே அன்றோ! மா, பலா, வாழை, தென்னை, நெற்பயிர், பூஞ்செடிகள் மலிந்த மூன்றுஏகர் தொண்ணூற்று ஏழு செண்டுள்ள நிலப்பரப்பில், வேகவதி நதித் தென்

கரையில் ஏகாந்த இனிமையும் எழிலும் கொண்டு இத்தலம் திகழ்கிறது.

இத்தலத்தில் எழுந்தருளியுள்ள நாதர், திருக்காயாரோகணேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். காயம்—சரீரம்; ஆரோகணம்—ஏற்றிக்கொள்ளுதல்.

ஊழி முடிவில், மலைத்திரிவும் கடற்புரட்சியும் உலக அழிவும் உயிர் ஒடுக்கமும் ஏற்பட்ட காலத்து, திருமால், பிரமன் ஆகியோரைச் சிவபெருமான் ஒடுக்கி, அவர்கள் சரீரத்தைத் தனது தோள்மீது ஏற்றி நடமாடும் நாயகராக—காயாரோகணேஸ்வரராக விளக்கமுறுகிறார், எம்பெருமான்.

'பல வாத்தியங்கள் இடையறாமல் முழங்கும் மணிமாட வீதிகளால் சூழப்பட்ட காஞ்சிமா நகரத்திற்கு உயிர்போற் சிறந்து ஒளிரும் காயாரோகணத்தின் மகிமை சொல்வோம்; கேளுங்கள்!'—என்று சூதமா முனிவர் சொல்லத் தொடங்குவதாகக் காஞ்சிபுராணம் கூறுவதிலிருந்து இத்திருக்கோயிற் சிறப்பு நனி விளங்கும்.

I. தல மகிமையும் வரலாறும்

இப் பூவுலகத்து உயிர்களை உண்டாக்கவல்ல பிரம தேவன், திருமால் முதலானோருக்குக் கால நிர்ணயம் ஏற்படுகிறது. அக்காலத்தை காட்டை, கலை, முகூர்த்தம், பகல், இரவு, பட்சம், மாதம், இருது, வருடம், யுகம் எனப் பலவாய்ப் பிரித்துக் கூறுவர். கால முடிவில் எல்லா உயிர்களும் இறந்து போகின்றன. அஞ்ஞான்று நிலைபெற்றிலங்கும் பொருள் உலகில் ஒன்றுமே யில்லை யன்றோ!

கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்னும் நான்கு யுகங்களுக்கு வருடம் நாற்பத்து மூன்று லட்சத்து இருபதினாயிரம் ஆகும். இந்த நான்கு யுகம் கொண்ட ஆயிரம், பிரம தேவனுக்கு ஒரு பகல் என்றும், அதுவே 'பிரம கற்பம்' என்றும் புராணம் புகலுகிறது. ஆயிரம் நான்கு யுகங்களே பிரமனுக்கு ஓர் இரவு. இப்படிப் பட்ட பகலும் இரவும் சேர்ந்தது ஒரு நாள் ஆகும். அந்நாள், முப்பது கொண்டது ஒரு மாதம். அந்த மாதம் பன்னிரண்டு கொண்டது ஒரு வருடம். பகல் வருடம் ஐம்பது ஒரு பரார்த்தம். இரவு வருடம் ஐம்பது ஒரு பரார்த்தம்.

இவ்வாறாக இரண்டு பரார்த்தமாய் முடியும் நூறு வருடம் ஆகிவிட்டால், அதுவே பிரம தேவனுக்கு முடிவுக் காலமாக அமைகிறது. ஆம்! வெண்டாமரைப் பூவினில் வீற்றிருக்கும் சரஸ்வதிக்கு நடனசாலை போலும் நாவினிடமாக நான்கு வேதங்களையும் இடையறாமல் பாராயணம் செய்துவரும் பிரமன், ஒடுக்கம் ஆகிறான்!

அந்த பிரம கற்பாந்த காலம், திருமாலுக்கு ஒரு நாளாக அமைகிறது. அவ்வகையில் நூறு வருடம் நிறைவுற்ற காலத்து, துளசி மாலை புரளும் திருமார்பினிடத்து திருமகள்

விளையாடும் திருமாலும் ஒடுங்குகிறான். பிரம விஷ்ணுக்கள் இவ்வண்ணம் லயமாக ஒடுங்கி வரும் காலத்தை, எதிர் நோக்குகிறான், சிவபெருமான். கால காலனும் காலத்தை வென்றவனும் ஆகிய பீடுடைய பெருமான் அல்லவோ அவன்! புன்னகை புரிந்த படியே பிரம விஷ்ணுக்களை உற்பத்தியாக்கியவாறே ஒடுங்கச் செய்கிறான். பொன்னனைய தமது திருமேனியில் அவர்களை ஏற்றிக் கொள்கிற நிலையில் திருக்காயாரோகணேஸ்வரர் ஆக—பெருமான் எழுந்தருளி இருக்கிறார்.

இத்தகு நிலையில், எண்ணிறந்த பிரம விஷ்ணுக் களுடைய காயத்தைத் தமது திருமேனியில் தாங்கிய வண்ணமே, ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறார், இங்கே! ஆன்மகோடிகளுக்கு அவரருள் சுரக்கிறது; பொங்கிப் பெருகுகிறது. ஆதலால், நகரங்களுள் புகழ்மேவிய காஞ்சிமாநகரின் கண்ணே, திருக்காயாரோகணத் தல நாதரை தரிசித்தவர்கள், எல்லா நலன்களும் எளிதில் எய்தப்பெறுதலோடு காயத்தோடு கயிலாயம் காணப் பெறுதலானதொரு நம்பிக்கையும் உள்ளது.

II. வழிபாடு செய்தவரும் வழிபட்ட முறைமையும்

1. தேவ குருவாகிய வியாழ பகவான்:

இவர் கொன்றை தவழ் சிவபெருமானைப் பூசித்தற் பொருட்டு இத்தலம் நாடி வருகிறார். வந்தவர் வாயார ஏத்திப் போற்றி வழிபடுகிறார்:

'எல்லாம் வல்ல எம்பெருமானே! தேவர்களுள் நீயே பிராமணன்; மற்றவர்களுள் நான் பிராமணன். பிராமணனுக்குப் பிராமணன் கதியேயன்றோ! உன்னை அவமதிப்பவன் எங்ஙனம் பிராமணன் ஆவான்? தன் குல தெய்வத்தைத் தொழாது, வேறு தெய்வத்தைத் தொழும் பிராமணன் எக்கதி அடையப் பெறுவான்? இம்மை மறுமை இன்பங்களை இழந்து, நரகத்திற்கே ஆளாவது உறுதி என்று வேதங்கள் விரித்துரைக்கின்றனவே! இதை யான் அறியமாட்டேனோ! அறிகுவேன்; அறிந்து அடியேன் உனது அடைக்கலம் ஆகின்றேன்! ஆதலால் நீயே எனக்கு மாதா-பிதா—குரு—எல்லாம்!

பிரம விஷ்ணுக்கள் தேடிட, திகைக்க வரும் பெருஞ் சோதியே! ரிடபக் கொடி தாங்கிய திருவருட் குன்றமே! கருணைக்கடலே! உலகோர் புகழ்ந்தேத்தும் நான்கு வேதங்களினின்று வடித்தெடுத்த அமுத சாரமே! பகவானே! நீயே கதி! நின் பாதமே கதி!'

—இவ்வாறெல்லாம் இறைஞ்சித் துதிக்கும் தேவகுருவின் பூசனைக்கு மெச்சி வருகிறார் பரமன். 'நீ வேண்டும் வரம் யாது கொல்?' – என்று அருள் பாலித்தவர்தம் அடிபணிந்து, வேண்டும் வியாழபகவான் வார்த்தைகள்:

'மா மேரு மலையை வில்லாக வளைத்து முப்புரங்களை அழித்தற்குப் புன்னகையை உதிர்த்தவரே! உமது திருவடி மேல் மாறுது நிலை பெற்றிருக்கும் நீங்கா பக்தியை அளித் தருள வேண்டும். இத்தலத்திலுள்ள தீர்த்த நீராடி, எனது வாரமாகிய குரு வாரத்தில் (வியாழக்கிழமையில்) உம்மை தரிசிக்கிறவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றி மேலான முத்திச் செல்வத்தை நல்குவீராக! இங்கு எந்நாளும் எம்பிராட்டியாருடன் நீவீர் இனிது வீற்றிருந்து அருள்வீராக! தேவர்கட் கெல்லாம் குருவாகும் பதவியினை அளித்து அருள் வீராக!'

—குளிர்வித்த குருவின் அமுத வாக்குக்கு மனமிரங்கிய ஈசன், வேண்டியன வேண்டியாங்கு ஈந்து, இலிங்கத் தினிடமாக மறைந்தருளுகிறார்.

2. மகாலட்சுமி:

செந்தாமரைப் பூவில் வீற்றிருக்கும் திருமகள், இத்தல நாதரை வில்வத்தால் அருச்சித்து ஆராதனை நிகழ்த்துகிறாள். அதனால் அகமகிழ்ந்தவர், அருள் பாலிக்கிறார். ஆம்! திருமாலைத் தனக்குக் கணவனாகப் பெறும் பேறு எய்துகிறாள் இலட்சுமி.

3. இயம தர்மராஜன்:

இவர் இங்குவந்து தீர்த்தம் எடுத்து, வழிபடுகிறார். அதன் பலன், 'தென்திசைக் கோமான்' என்ற பதவி இயமனுக்குக் கிடைக்கிறது. அம்மட்டோ? 'இத்தலத்தில் என்னை வந்து அடையும் அடியார்களை இடர் செய்கு வையாயின், இப்பதவி உடனே ஒழிந்து போம்!' என்ற ஆண்டவனின் அச்சுறுத்தும் பார்வைக்கு அடிபணிந்து செல்கிறான். எனவே, இத்தலத்தில் இறுதிக் கடனைக் கழிப்பவர்கள், நரக வேதனை நீங்கி நல்லின்ப வீடுபேறு அடைவர்.

III. குரு—ஒரு விளக்கம்

குரு—என்பதில் குகாரம் அந்தகாரமாம். ருகாரம் அதனை விழுங்கும் தேஜஸ் எனப்படுகிறது. அஞ்ஞானத்தை விழுங்கும் பிரம்மம் குருவே ஆகும்.

குகாரம் இருளாம். ருகாரம் அதனைக் கெடுப்பதாம். அந்தகாரமாகிய இருளைக் கெடுப்பதாக இருப்பதால் குரு என்று கூறப்படுகிறது.

குகாரம் சத்துவாதி குணங்களைக் கடந்த குணாதீதமாம். வெண்மை முதலிய உருவங்களைக் கடந்த ரூபாதீதம் ருகாரமாம். குண ரூபங்கள் இல்லாததாய் இருத்தலே குரு ஆம்.

குகாரமாகிய முதல் எழுத்து, மாயாதி குணங்களை விளக்குவதாம். ருகாரம் என்னும் இரண்டாவது எழுத்து, மாயா மயக்கத்தினைக் கெடுக்கும் பரப்பிரம்மமாம்.

இத்தன்மைகளால் குருபதம் மிக விசேடம். தேவர் கட்கும் கிடைத்தற்கு அரிது. எம்பெருமானுடைய இரு மருங்கும் எஞ்ஞான்றும் கோஷித்துக் கொண்டிருக்கும் கந்தர்வர்களாலும் பூஜிக்கப்பட்டதாம்.

பிரம்ம விஷ்ணு சிவ வடிமாகிய குரு ஒருவரே இவ்வுலகெங்கிலும் நிறைந்து இருக்கிறார். குருவை விட மேலான தத்துவம் இல்லை; மேலான தெய்வம் இல்லை. ஆபத்து காலத்தில் சகல தர்ம வடிவமான குரு ஒருவரே காப்பவர் ஆகிறார்.

குருவின் தன்மைகள்:

குருவே பிரம்மா; குருவே விஷ்ணு; குருவே மகேஸ்வரனாகிய தேவன். குருவே ஏகமாகிய பரப்பிரம்மம். ஆதலால் அத்தன்மையரே ஸ்ரீகுரு.

மூன்று நேத்திரமின்றி சாக்ஷாத் சிவமாயும், இரு புஜங்களுடைய விஷ்ணுவாயும், சதுர் (நான்கு) முகங்கள் இல்லாத பிரமாவாகவும் இருக்கும் தன்மையர் எவரோ அவரே ஸ்ரீகுரு.

இராஜச மயமான பிரம்மாவாய் சிருஷ்டிக்கிறவரும், சத்துவ மயமான விஷ்ணுவாய் இரட்சிக்கிறவரும், தாமஸ உருத்திர வடிவாய் சங்கரிக்கிறவரும் எவரோ அவரே ஸ்ரீகுரு.

ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், கீர்த்தி, திரு, சொல்லப்பட்ட செல்வம் என்ற ஆறு குணங்களையுடைய ஐசுவரியத்தை உடைய பகவான் (பகம் என்பது சர்வஞ் ஞத்துவாதி ஐசுவரியம்; அவற்றை உடையவர் பகவான்) எவரோ அவரே ஸ்ரீகுரு.

பவ மென்னும் காட்டில் புகுந்து திசை மயக்கம் என்னும் மோகத்தை அடைந்த சித்தமுடையவனுக்கு எவரால் வழிகாட்டப் படுகிறதோ அவரே ஸ்ரீகுரு.

அஞ்ஞானம் என்னும் திமிரத்தால் குருடாயுள்ளவனது கண், ஞானம் என்னும் அஞ்சன சலாகையினுல் (கண்ணிற்கு இடும் மையோடு கூடிய குச்சி) திறக்கப்படும் தன்மையர் எவரோ அவரே ஸ்ரீகுரு.

தாவர சங்கமமான இச்சராசரம் எதனுல் வியாபிக்கப் பட்டு இருக்கிறதோ, அந்த துவம்பதம் (துவம்—நீ) எவரால் காட்டப்பட்டதோ—அந்த தத்பதம் (தத்—அது), அந்த அசித்துவம் (இருக்கிருர்) எவரால் காட்டப்பட்டதோ அத்தன்மையரே ஸ்ரீகுரு.

எவர் வாக்கியத்தால் நிமிஷத்தினுடைய பாதியின் பாதியில் அல்லது கால்பங்கில் ஆத்மா அறியப்படுகிறதோ, தனது ஆத்மாவை புருஷன் ஸ்திரமாகத் தரிக்கிருனே அவரே ஸ்ரீகுரு.

சைதந்நியமும் சாசுவதமும் சாந்தமும் ஆகாயத்திற்கு அப்பாற்பட்டதும், நிரஞ்சனமும் நாதபிந்துகளுக்கு அப்பாற்பட்டதும் ஆகி நிற்பவரே ஸ்ரீகுரு.

எதனுடைய இருப்பினுல் ஜகம் உளதாக இருக்கின்றதோ எதனுடைய விளக்கத்தால் இது விளங்குகின்றதோ, எதனுடைய ஆனந்தத்தால் எல்லாம் ஆனந்திக்கின்றதோ அத்தன்மையரே ஸ்ரீகுரு.

இதயத் தாமரையில் கர்ணிமை (பொகுட்டு) நடுவில் இருக்கும் சிம்மாசனத்தின்கண் வீற்றிருக்கும் திவ்வியத் திருவடிவாகவும், சந்திர கலா பிரகாசமாகவும், சச்சிதானந்த வடிவமாகவும், தனது பாதத் தாமரையில் சகல சம்சாரங்களாகிய காட்டை எரிக்கும் காலாக்கினியாகவும், அகார ககார தகார முதலிய மூன்று ரேகைகளையுடைய தாமரையில் ஆயிரம் இதழ்களையுடைய மண்டலத்தில் திரிகோணத்தின் நடுவில் பிரகாசிக்கும் வடிவமாகவும் இருப்பவரே ஸ்ரீகுரு.

சிவன் கோபித்த காலத்து, குரு இரட்சிப்பவர் ஆகிருர்; ஆனுல் குரு கோபித்த ஞான்று இரட்சிப்பவர் ஒருவரும் இல்லை.

குருவின் முகத்தில் பிரம்மம் இருக்கிறது அது அவரது அருளால் அடையப்படுகிறது.

தியானத்திற்கு மூலம் குரு வடிவம். பூஜைக்கு மூலம் குருவின் திருவடிகள். மந்திரத்திற்கு மூலம் குருவின் திருவாக்கியம். முக்திக்கு மூலம் குருவின் கிருபை.

வேதங்களையும் ஆறங்கங்களையும் (சிட்சை, கல்பம், வியாகரணம், நிறுத்தம், சந்தசு, சோதிடம்), ஆகமங்களையும், அத்யாத்ம (ஆத்மாவை உணர்த்தும் நூல்) முதலான சாத்திரங்களையும் ஓதி இருந்தபோதும், குருவின் அருள் வேண்டும்.

எனது நாதன் ஜகந்நாதன். எனது குரு ஜகத்குரு. எனது ஆத்மா சகல பூதங்களின் ஆத்மா.

சம்சார சமுத்திரத்தைக் கடப்பிக்கும் முக்கிய மந்திரமும், பிரம்மாதி தேவர்களால் பூசிக்கப்பட்ட சித்த மந்திரமும், தாரித்திரிய (வறுமை துயர்) துக்கத்தையும் பவரோகத்தையும் கெடுக்கும் மந்திரமும் ஆகிய மகாபயத்தைக் கெடுக்கும் குரு ராஜ மந்திரத்தை நமஸ்கரிக்கின்றேன்!'

—இவ்வாறு ஸ்ரீ ஸ்காந்த புராணத்தின் உத்தர காண்டத்தில் உமா மகேஸ்வர சம்வாதமாய், ஸ்ரீவியாஸ பகவான் அருளிச்செய்து இருக்கிறார்.

சற்குரு வணக்கம்:

சத்த சத்துக்களைப் பிரித்து அறியும் பிரம்மஞான சிரேஷ்டராகிய அவரே சாக்ஷாத் சற்குரு. அவருடைய பவித்திரமான ஸ்தானங்களை தியானித்து வணங்குவோமாக!

'குரு ப்பிரம்மம் குரோர் விஷ்ணு
குருதேவோ மஹேஸ்வரா
குரு சாக்ஷாத் பரப்பிரம்மம்
தஸ்மை ஸ்ரீகுருவே நம:

சைதன்னியம் ஸாஸ்விதம் சாந்தம்
ஸர்வ மங்கள தேவதம்
நாதபிந்து களாதீதம்
தஸ்மை ஸ்ரீகுருவே நம:

குருபாதோதகம் பீத்வம்
குருசிஷ்டான்ன போஜனம்
குருமூர்த்தி ஸதாத் தியானம்
தஸ்மை ஸ்ரீகுருவே நம:

பிரம்ம விஷ்ணச் சருத்திரச்ச
ஈஸ்வரச்ச சதாசிவ
ஏதோ பகவதோ யஸ்ஸிய
தஸ்மை ஸ்ரீகுருவே நம:

அக்கியான திமிராந்தஸ்ய
ஞானஞ் ஜன சலாகயா
சட்சுர் உன்மீளிதம் யேன
தஸ்மை ஸ்ரீகுருவே நம:'

இவ்வுலகில் குருவுக்குத் தலைவணங்காதவர் இல்லை. குரு என்னும் சொல்லுக்கு மேன்மை கொடுக்காதவர் இல்லை. ஆம். ஆசரித்துக் காட்டுபவர் ஆசார்யர் என்றும், கௌரவமுள்ளவர் குரு என்றும் இலிங்க புராண வசனம் (உத்தர பாகம் 20—19—20) கூறுகிறது. 'குருவாய் வருவாய் அருள்வாய்'—என்று ஸ்ரீகுகப்பெருமானை நினைந்து அருணகிரிநாதர் இறைஞ்சுகிறார். தாயுமானவ சுவாமிகளோ, 'மந்த்ர குருவே! யோக தந்த்ர குருவே! மூலன் மரபில் வருமௌன குருவே!' என்றும், 'சின்மயானந்த குருவே!' என்றும் நெஞ்சு நெக்கு உருகப் பாடுகிறார். பழம் பெருமை வாய்ந்த பன்னிரு சித்தர்களும் தாங்கள் கையாண்ட வைத்தியத் துறைக்கு 'குரு'வை மேலானதொரு நிலையில் வைத்துப் போற்றிப் பாதுகாத்து வந்திருப்பதைப் பன்னூல்களுள் பரக்கக் காண முடிகிறது.

'மெய்யப்பா குகைதனிலே சூதம் விட்டு வேண்டியே குரு போடு; மணிபோல் ஆடும்.' என்றும், 'நாட்சென்று பாராதே குரு முடித்துப்பாரு' என்றும், 'நன்றாக குரு அறிந்து நான் சொன்னேனே' என்றும், 'பாருநீ குருவேணும்; கைமுறை தான் வேணும்; பதறாதே, இப்படியே வைத்தியம் செய்வாய்'

—என்றும் அகத்தியர் பன்னிரு காண்ட வைத்தியம் விளம்புகிறது.

குருவின் அடையாளம்:

அகத்தியர், இராமதேவர் முதலானோர் அருளிய நூல்களிலும் அங்க சாமுத்திரிகம் அஸ்த சாமுத்திரிகம் கூறும் நூல்களிலும் உண்மைக் குருவின் உருவம் படம் பிடித்துக் காட்டப்பட்டு இருக்கிறது. வலது முழங்தாளில் மருவும், முதுகில் மருவும், கைகளில் சங்கு சக்கரமும், மச்சரேகையும், இடது நாசி மேல் மருவும், கண்டம் சாய்வாயும், நெற்றியில் சூல விருக்ஷரேகையும் திரிசூல நாடியும் இன்னும் சில அடையாளங்களும் கூறப்பட்டு இருக்கின்றன.

குரு, சனி ஒரு பாகைக்குள் கூடி பாக்கியத்தில் இருக்க, மற்ற இடத்தில் இப்படி இருந்தாலும், நற்கோள் பார்க்கிலும் பானு உதயத்தில பிறந்தவன் முனிபுங்கவன் ஆவான் என்றும், குரு, சுக்கிரன், சனி கூடில், பொன் வெள்ளி செய்யும் சக்தியும் ரசவா சித்தியும் பெற்று பன்னாள் ஞானி ஆவான் என்றும், கன்னி, துலாம், வில், மீனம், மேடம் என்ற இவை இலக்கினமானாலும், சந்திரன் இருந்தாலும் நல்ல ஞானயோகம் பெறுவான் என்றும், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, மூலம், பரணி, உத்திராடம், உத்திரட்டாதி ரேவதி, அசுவனி ஆகிய நட்சத்திரம் உடையவர்கள் வேதாந்த ஞானசித்திகள் வாய்க்கப் பெறுவர் என்றும் சோதிட நூல்கள் புகலும்.

IV. கட்டடக் கலை

இக்கோயிலின் கட்டடக்கலையையும் வேலைப்பாடுகளை யும் ஓர்கையில், சிற்ப நூல் வல்லார் கூறும் கஜப் பிரஷ்டம் (தூங்கானை மாடம்) என்ற அமைப்போடு கோயில் விமானம் அமைந்திருப்பது தெரியவரும்.

மூவர் சந்நிதியில் சிம்மம் இல்லாத கல் தூண்களின் அமைப்பு முறை அனைத்தும் பிற்காலப் பல்லவர் காலத்தவை யாகக் காணப்படுகின்றன. எனினும், விமானமும் கட்டட அமைப்பும், அதில் காணப்படும் மகாதோரண கணங்களின் வரிசையும் சோழர் காலத்தை நினைவுபடுத்துகின்றன.

பஞ்ச கோட்டத்துடன் கூடிய ஏகப் பிரகாரத்தில் அமைந்துள்ள மூர்த்திகள்:

1. முருகப்பெருமான்:

சில வருடங்களுக்கு முன்னர் பூமியிலிருந்து கண்டெடுக்கப் பட்டதாகக் கூறப்படும் இம் முருகர், சோழர் கால சிற்ப அழகு ஒழுக, நின்ற திருக்கோலத்தில் காணப்படுகிறார்.

2. சைவ நாயன்மார் நால்வர்:

சைவ சமயப் பெரியார்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் எனற நால்வர்தம் உருவங்கள் பக்தி பாவத்தோடு அமைந்துள்ளன.

3 மகா விரத லிங்கங்கள்:

மகாவிரதம் என்று சொல்லப்படும் ஆறு இலிங்கங்கள் உள்ளன. அவைகளுள் இரண்டு ஆவுடையாருடனும்,

மற்ற நான்கு ஆவுடையார் இல்லாமலும் காண்கின்றன. மகா விரத முனிவர்கள் என்று கூறப்படும் அறுவர் வந்து, இந்த இலிங்கங்களை வழிபட்டுச்சித்தி பெற்றதாக ஒரு கர்ண பரம்பரைச் செய்தி கூறுகிறது. மகா விரத முனிவரைப் பற்றிய தகவல் இல்லை.

4. கற்பக விநாயகர்:

நினைத்தது நினைத்தவாறே நல்கும் கற்பகத்தரு போன்று இவ்விநாயகர், மகிமை பொருந்தியவர்.

5. ஆறுமுகப் பெருமான்:

வில்வடியில் கருணைபொங்கும் அழகுடன் ஆறுமுகப் பெருமான் வீற்றிருக்கிறார். கவர்ச்சிமிகு தோற்றம்.

6. மகா லட்சுமி:

இங்கு கையில் தாமரை மலர் தாங்கிய மகாலட்சுமி தனித்து காணப்படும் கவின்கோலம். ஊழி முடிவில் எல்லா உயிர்களும் ஒழிந்தமையால், யானை அற்ற நிலை என்பர்.

7. நவக்கிரகம்

8. சண்டிகேஸ்வரர்

9. வைரவர்

10. சூரியன்

11. வியாழ பகவான் என்ற தல குரு பகவான்:

அகத்தின் அழகு முகத்தில் தெரிய, ஆண்டவனை நினைந்துருகி ஆனந்தமாகத் தியானிக்கிறார். கை தொழுத வாறு அமர்ந்து அனைவரையும் ஆகர்ஷிக்கும் அழகுத்திருக்கோலம்.

V. இலக்கிய, சரித்திரச் சான்றுகள்

இக் கோயிலின் காலம் சரியாக வரையறுத்துக் கூற இயலவில்லை. எனினும், பழம் பெருமை உடையது என்று துணியலாம். 'கச்சிப் பல தளியும் ஏகம்பத்தும் கயிலாய நாதனையே காணலாமே' என்று பாடுகிறார் அப்பர்பெருமான். புராணங்களை வரலாறாகக் கொள்ளலாகாது. எனினும், அவையும் மக்கள் வழக்கில் இருந்த கொள்கைகளையும் மரபு களையும் தெரிவிப்பன என்பதில் ஐயம் இல்லை அந்த வகையில், இத்தலம் பழம் பெருமையோடு அதிக முக்கியத் துவமும் இருந்திருக்கக்கூடும் என்று ஊகிக்க இடமுண்டு.

புகழ்சான்ற காஞ்சிக் கோயில் கல்வெட்டுகள் **523ல்,** இத்திருக்காயாரோகணேஸ்வரர் கோயில் சாசனங்கள் இன்னும் தொல்பொருள் இலாகாவினரால் பதிவு செய்யப் பெறாமல் இருப்பது குறிப்பிடத் தக்கது. மேலான கவனத் திற்கும் உரியது.

இக்கோயில் ஏகப்பிரகாரத்தின் (மூலவருக்கு எதிரில்) வெளிப்புறச் சுவரிலுள்ள தமிழ்க் கல்வெட்டு:

'ஸ்வஸ்தி ஸ்ரீ பூமாது வாழ புகழ்மாது வணங்க ஜய மாது விரும்ப நிலமகள் நிலவ மலர் மகள் புணர... ....வீரசிம்மாசனத்து உலகுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோராஜகேசரிவன்மரான உடையார் குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு'

கருப்பக்கிருக சுற்றுப்புற வெளிச்சுவரின் பின்புறத்தில் இன்னொரு தமிழ்க் கல்வெட்டு வருமாறு:

'ஸ்வஸ்தி ஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு 8-வது பெற்ற ...'

இன்னொரு கல்வெட்டு தேய்ந்து மழுங்கி உள்ளது.

மேற்கூறிய இரண்டாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன் ஆகியோர் சாசனங்களில் மெய்க்கீர்த்திகள் காணப் பெறவில்லை. தொடங்கிய கல்வெட்டுகள் முற்றுப்பெறவும் இல்லை. எனவே மேற்படி சோழர்களின் ஆரம்பகால ஆட்சியின்போது, இக்கோயில் புதுப்பித்து இருக்கவேண்டும் என்று உணரலாம். பின்னர் மெய்க்கீர்த்திகள் ஏற்பட்டிருக்க வேண்டும்.

தலநாதர்:

இத்தல மூலவராகிய திருக்காயாரோகணேஸ்வர இலிங்கம் மகிமை மிக்கது அதன் மேற்பகுதி குவிந்து பளபளப்புடன் காணப்படுகிறது. கிழக்கு நோக்கிய சந்நிதி. வியாழக்கிழமை தரிசனம் விசேடம். அம்பாள் **ஸ்ரீ கமலாம்பாள்.**

தலவிருட்சம்:

இத்தல விருட்சம் வில்வம். காஞ்சியிலுள்ள கச்சிஏகம் பத்துள் மாவடியும், கச்சபேசத்துள் முருக்கடியும், காயாரோ கணத்துள் வில்வடியும் மிக முக்கியமானவை. வாத பித்த கப ரோக நீக்கத்திற்குப் பெரிதும் உதவும் வில்வத்தை அறியாத வைத்தியர்களே இல்லை எனலாம்.

தல தீர்த்தம்:

இத்தல தீர்த்தம் குருவார தீர்த்தம் என்றும், இலக்குமி குண்டம் என்றும் பெயர் பெறுகிறது. அன்னை ஸ்ரீ இலக்குமி முன்வந்து தீர்த்தம் அமைத்தமையின், 'தாயார் குளம்' என்று ஒரு பெயருமுண்டு. பொதுவாக நாற்கோண அமைப்பினின்றும் இத்தீர்த்தம் வேறுபட்டு ஐங்கோண வடிவில் அமைந்து இருக்கிறது.

இயம தர்மராஜன் தனித்து வந்து பூஜித்த போது, தீர்த்தகரீஸ்வரராக காட்சி தந்தருளிய ஈஸ்வரரைத் தீர்த்தக் கரையில் காணலாம்.

கோயில் நிர்வாகம்:

தற்போது இந்து அற நிலைய பாதுகாப்புத் துறையினரின் மேற்பார்வையில் இக்கோயில் நிர்வாகம் நடைபெறுகிறது. சித்த பரம்பரை தக்கோலம் ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்க சுவாமிகளின் மாணவசீடர். திரு. வி. கன்னியப்ப முதலியார் அறங்காவலர் பணியை நன்முறையில் ஆற்றுகிறார்.

வருவாய்:

காஞ்சிபுரத்தை அடுத்த செவிலிமேடு கிராமத்தில் இக்கோயிலுக்கு உரிய நன்செய் 7 ஏகர் 89 செண்டும், இனும் ஒரு ஏகர் 65 செண்டும், வேகவதி நதித் தென் கரையில் புன்செய் 60 செண்டும், மற்றும் புன்செய் 5 ஏகர் 13 செண்டும், நைவேத்தியத்திற்காக புளியந்தோப்பு 35 செண்டும் இருப்பதாகவும், அவை கோயில் நிர்வாகச் செலவினங்களுக்குப் பயன் படுத்தப்படுவதாகவும் தெரியவருகிறது.

நாடோறும் மூர்த்திக்கு இருகால பூஜையும், சஷ்டி, நவராத்திரி முதலிய திரு நாட்களில் விசேட அபிடேக ஆராதனையும் நடக்கிறது.

VI. குரு பெயர்ச்சி வைபவம் 31

தென்னிந்தியாவிலேயே குரு தனி சந்நிதியோடு எழுந்தருளியுள்ள தலம், காஞ்சி காயாரோகணத்தைத்தவிர வேறு இல்லை என்று கூறப்படுகிறது. இத்தலத்தையொட்டி, கரக்கோயில் அமைப்பில்—தேர் வடிவில்—ஈசன் சந்நிதி உள்ளது.

வருடத்திற்கோர் முறை குரு பகவான் ஒரு ராசியிலிருந்து இன்னொரு ராசிக்கு இடம் பெயருவதைக் 'குரு பெயர்ச்சி' என்கிறோம். அப்படி இடம் பெயரும் அன்று, குரு பகவானுக்கு விசேட அலங்கார ஆராதனை நிகழ்த்தி வணங்குவது நல்லது; குரு அருள் கிடைக்கும் என்பது நம்மனோர் நம்பிக்கை.

சென்ற வருடம் காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், இளைய சுவாமிகள் முன்னிலையில் பக்த கோடிகள் குரு அருள் பெற்றனர்.

இவ்வருடம் குரு பகவான் மேஷத்திலிருந்து ரிஷபத்திற்கு இடம் பெயர்ந்த (19—3—'65) நன்னாளில், காஞ்சி ஸ்ரீ ஆசார்யாளின் அருள் ஆசியோடு இவ்வைபவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. அதிகாலையிலிருந்தே ஆராதனையும் அன்னதானமும் ஆரம்பமாயின. மங்கல இசைகள் முழங்கின. அவ்வமயம் பக்த கோடிகள், ஸ்ரீ காயாரோகணேஸ்வரர் திருவருளும் ஸ்ரீ வியாழபகவான் குருவருளும் பெற்று இன்புற்ற நிலையில், இவ்வைபவத்தின் சிறப்பு நனி விளங்குமன்றோ!

உ

திருவாவடுதுறை ஆதீனம்

மாதவச் சிவஞான சுவாமிகள்

அருளிய

காஞ்சிப் புராணம்

VII. காயாரோகணப் படலம்

(எழுசீரடி ஆசிரிய விருத்தம்)

வயிறுளைந் தலறிச் சங்கினம் உயிர்த்த
மணிநிலா எறித்திருள் சீத்துப்
பயில்விரை முளரி இலஞ்சிசூழ் கிடந்த
பணைதரீச் சரம்இது பகர்ந்தாம்;
துயில்வர அறியாப் பல்லியம் துவைக்கும்
தூமணித் தெற்றிசூழ் காஞ்சிக்(கு)
உயிரெனச் சிறந்த உத்தமத் திருக்கா
ரோணத்தின் உண்மையை உரைப்பாம். 1

பிரமாதியோர் கால நிர்ணயம்

படுங்கலை முகுர்த்தம் காட்டைகள் என்றுப்
பகல்இராப் பக்கமே திங்கள்
ஒடும்புணர் இருது ஆண்டுகத் தொடக்கத்(து)
ஓதிய அவயவப் பகுப்பான்
இடும்பைதீர் காலம் கழிவுறும் காலத்(து)
எல்லையில் யாவரும் இறுவர்
நெடும்புலக் குறும்பு கடந்துளீர் உலகின்
நிலைப்பதோர் பொருளுமற் றின்றால். 2

ஈண்டும்ஓர் இருபான் ஆயிரம் தலையிட்(டு)
இயன்றநாற் பத்துமூன் றிலக்க
யாண்டெனப் படுவ நான்குகத் தளவை
இல்முறை ஆயிரம் இறந்தாற்
காண்டகும் அயனுக் கொருபகல் அதுவே
கற்பமாம் இரவும்அத் துணைத்தவ்
வாண்டகைக் கந்நாண் முப்பதோர் திங்கள்
அஃதொரு பன்னிரண் டாண்டே. 3

pagina 39

பகர்ந்தஆண் டொருநா றிருவகைப் பரார்த்தம்
பற்றறில் வெள்ளிவண் டோடு
தகர்ந்திட உடைத்து முடங்குகால் ஞிமிறு
தழங்கிசைப் பேட்டொடு நறுந்தேன்
நுகர்ந்துபண் பயிற்றும் பொகுட்டலர் கமல
நோன்மலர் அணங்கினுக் கரங்கம்
நிகர்ந்தநா வகத்துப் பழமறை கொழிக்கும்
நெடுந்தகைக் கிறுதிவந் துறுமால். 4

அங்கது முகுந்தன் தனக்கொரு பகலாம்
அம்முறை ஆண்டுநா றெய்தின்
செங்கதிர்ப் பரிதி மழுங்கவிட் டெறிக்கும்
சேயொளி விலைவரம் பிகந்த
பைங்கதிர்க் கடவுட் கவுத்துவம் இமைப்பப்
பசுந்துழாய் துயல்வரு மார்பில்
கொங்கலர் கதுப்பின் திருவிளை யாடும்
குரிசிலும் எய்துவன் ஒடுக்கம். 5

காயாரோகணப் பெயர்க்காரணம்

இருவரும் ஒருங்கே இறவருங் காலை
எந்தையே ஒடுக்கிஆங் கவர்தம்
உருவம் மீ தேற்றிக் கோடலாற் காயா
ரோகணப் பெயர்அதற் குறுமால்
வருமுறை இவ்வா றெண்ணிலா விரிஞ்சர்
மாயவர் காயம்மேல் தாங்கிக்
கருணையால் அங்கண் நடம்புரிந் தருளும்
காலமாய்க் காலமும் கடந்தோன். 6

திருமகள் வழிபாடு

ஆதலாற் சிறந்த திருநகர் அதனை
அடைந்துளோர் இருமையும் எய்தி
மேதகு துரியம் கடந்தபே ரின்ப
வீட்டினைத் தலைப்பட வல்லர்

சீதள கமலப் பொகுட்டனைக் கிழத்தி
செஞ்சடைப் பிரானைவில் லத்தால்
கோதற வழிபட் டச்சுதன் தனக்குக்
கொழுநனுப் பெற்றனள் அங்கண். 7

வியாழப் புத்தேள் வழிபாடு

பிறங்கொளி விசும்பிற் குரவனும் வியாழப்
பெருந்தகை ஆயிடை எய்திக்
கறங்கிசை விளரிப் பாட்டளி இமிர்ந்து
களிமதி உண்டுதேக் கெறிந்தங்
குறங்குபொன் இதழி நறுந்தொடை வேணி
ஒருவனை அருச்சனை ஆற்றி
அறங்கரை சிறப்பிற் சேந்தநாத் தழும்ப
ஆரண மொழிகளால் துதிப்பான்: 8

பிராமணன் நீயே கடவுளர் தம்முள்
பிஞ்ஞகா ஏனையோர் தம்முள்
பிராமணன் யானே பிராமணன் தனக்குப்
பிராமணன் கதி; உனை இகழ்வோன்
பிராமணன் அல்லன் தன்குல தெய்வம்
விண்டுபின் ஞென்றனை தொழும் அப்
பிராமணற் கிரண்டும் பயப்படா நிரையம்
புகுவன் என் றுயர்மறை பேசும். 9

அடியனேன் உன்தாள் அடைக்கலம் நீயே
அன்னையும் அத்தனும் குருவும்
துடிஇடைப் பதுமை கேள்வனும் அயனும்
தொடர்வரும் சோதியே செல்வக்
கொடிமிசை இடபம் உயர்த்தருள் கருணைக்
குன்றமே அருட்பெருங் கடலே
படிபுகழ் மறைநூல் வடித்ததெள் அமிழ்தே
பகவனே இணையடி போற்றி! 10

குருபகவான் வரம்பெறல்

என்றெடுத் தேத்தும் ஆண்டளப் பானுக்
கெம்பிரான் எதிர்எழுந் தருளி
நன்றுநீ வேட்ட கூறுகென் றருள
வீழ்ந்துவீழ்ந் திறைஞ்சினன் நவில்வான்
குன்றவில் குழைத்துப் புரிசைமூன் றிறுப்பக்
குறுநகை முகிழ்த்தருள் குழகா
நின்திரு அடிக்கீழ் இடையறுப் பத்தி
நெறிஎனக் கருள்செய வேண்டும். 11

வளங்கெழு வேக வதிநதித் தென்பால்
வயங்கும்இத் தீர்த்தநீர் படிந்து
விளங்கும்என் வாரத் துன்னடிச் சேவை
விழைதகப் பெற்றுளோர் தத்தம்
உளங்கொளும் உறுதிப் பயன்அளித் தருளி
முத்தியும் உதவிஈண் டென்றும்
இளங்கதிர் முலையோ டினிதமர்ந் தருளாய்
இவ்வரம் வேண்டும்என் றிரந்தான். 12

இயமன் வழிபாடு

அங்கவை வழங்கிக் கடவுளர்க் காசான்
ஆம்பெருந் தகைமையும் நல்கிச்
சங்கவெண் குழையான் இலிங்கத்தின் மறைந்தான்
தருமன்அங் கெய்திஎத் தெடுப்பப்
புங்கவன் தோன்றித் தென்திசைக் கிறையாம்
புரவளித் தெமைவணங் குநர்க்கு
மங்கருந் தண்டம் இயற்றிலன் றுனக்கு
மாளும்இப் பதமென விடுத்தான். 13

தென்புலத் தவர்க்குச் செய்கடன் ஆங்குச்
செலுத்திடின் வீடுபெற் றுய்வார்
மின்பழுத் தன்ன நெறித்தவார் சடிலம்
வீழென வெரிந்புறம் கிடப்பப்
பொன்பழுத் தனைய ஐந்தழல் நாப்பண்
புரிதவக் கொள்கையீர் அநேகர்
அன்புசெய் தங்கண் பேறுபெற் றுயர்ந்தார்
அத்தல மேன்மையார் மொழிவார்! 14

★

PHONE: 201

காஞ்சிபுரம் முருகன் பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம்

லிட்., நெ. ஜி. 1653

79, காந்தி ரோடு, :: காஞ்சிபுரம்.

இமயம் முதல் குமரி வரை அனைவரும் விரும்பி
வாங்கும் பலவண்ண அசல் காஞ்சிபுரம் பட்டு
சரிகை சேலைகள், பாவாடை, சோளி
ரகங்கள் முதலியவற்றை நவீன டிசைன்
களில் ஏராளமாக உற்பத்தி செய்து,
மலிவான விலையில் விற்பனை
செய்யும், முன்னணியிலுள்ள
ஒரே கூட்டுறவு
ஸ்தாபனம்.

பொதுமக்கள் சேவையே எங்கள் குறிக்கோள்.

A. N. பாஸ்கரன், B.A., காரியதரிசி.

C. R. உமாபதி, தலைவர்.

உ

நகரங்களில் சிறந்தது **காஞ்சி!**

ரொட்டி வகைகளில் சிறந்தது **கஸ்தூரி!**

★

ஸ்ரீ கஸ்தூரி பேகரி

(கேக்குகள் தயாரிப்பதில் பெயர்பெற்றது)

110, பி. எஸ். கந்தசாமி ஸா தெரு,

சேக்குப்பேட்டை, : காஞ்சிபுரம்.

KANCHIPURAM.

எல்லோரும் விரும்புவது

ஏரோ இங்க்

சென்னை நகர ஏஜண்டுகள்:—

சிக்கந்தர் ஸ்டோர்ஸ் ☎ : 21225 68. மலையபெருமாள் தெரு சென்னை-1.

தயாரிப்பாளர்கள்:

G. A. B. லாபரட்டரீஸ்,

55-B, சேக்குப்பேட்டை சாலியர்தெரு, காஞ்சிபுரம்.

Estd. 1948 Regd. 193975

எங்களிடம் காபிக் கொட்டை, காபி பவுடர் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பதுடன், மின்சாரத்திஞல் வறுத்தும் அரைத்தும் கொடுக்கப்படும்.

வசந்தா காபி ஒர்க்ஸ்,

8, காந்தி ரோடு, :: காஞ்சிபுரம்.

விரைவில் எதிர்பாருங்கள்!

காஞ்சிபுரத்தில்

தங்குவதற்கு நவீன வசதிகள்
அமைந்த இடம்

பல்லவ மாளிகை

Pallava Palace

516-519, காந்தி ரோடு ... காஞ்சிபுரம்.

உரிமையாளர்கள்:
S. S. M. & BROS,
S. S. S.
SILK CLOTH MERCHANTS.

162884
45

ஜகத் குரு வழிபட்ட

ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயில்*

காஞ்சி—ஸப்த புரிகளில் ஒன்று; அது ஒரு மகாபீட ஸ்தானம். மேலும், அது ஸ்ரீ சங்கர பகவத் பாதாளுடைய சமாதி ஸ்தானமும் ஆகும். இந்த ஸ்தலத்தில் இவ்வளவு பெருமைக்கும் காரணம், அதன் நடுநாயகமாய் அமைந்துள்ள ஸ்ரீ காமகோட்டம் தான் எனில் அது மிகையாகாது.

யுகப் பிரளயத்திற்குப் பின், ககார, அகார, மகார சொரூபங்களாகிய பிரம்மா, விஷ்ணு, உருத்திரர்ஆகியவர் களைச்சிருஷ்டியின் நிமித்தம் தோற்றுவிக்கிருள் அம்பிகை. இவ்வுலக உயிர்கள் உய்யவேண்டி, அவைகள் வேண்டியதை வேண்டிய வண்ணம் ஈந்து, ஸ்ரீ காமாட்சி என்றும், ஸ்ரீ காமகோடி என்றும் பெயர் பெற இங்கு எழுந்தருளி இருக்கிருள். அதனுலேயே இத்தலத்தை ஸ்ரீபுரம், பத்ம நாபகம், ஜீவன் முத்திபுரம், காம கோட்டம், பஞ்சபாண நிகேதனம் எனப் பலபெயரிட்டு பக்தர்கள் அழைக்கின்றனர்.

---

*15—9—'63 தேதிய தினமணி சுடரில் வெளியான இக் கட்டுரையை, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சார்ய சுவாமிகள் நன்கு பார்வையிட்டு 10—12—'63ல் அருட் பிரசாதம் அனுக்கிரகித்து இருக்கிருர்கள். அப்பெரியவர் களுக்கு எனது திரிகரண சுத்தியோடு கூடிய வணக்கம். —ஆ·ர்·

மகா சக்தி பீடங்கள்:

இவ்வுலகம் சக்தி மயமானது; பராசக்தியின் சொரூபமாய் இலங்குவது. எனினும், இவ்வுலகிலுள்ள தேவிக்கான ஆருயிரத்து நானூறு சக்தி பீடங்களுள் அறுபத்து நான்கு பீடங்களே முக்கியமாகக் கருதப்படுகின்றன. அவற்றுள்ளும் சிறந்த ஐம்பத்து ஆறு பீடங்களுள், முப்பத்து ஆறு பீடங்களே நனி சிறந்தன என்பர். அவற்றுள்ளும் சிறந்த பதினெண் பீடங்களுள், மூன்று பீடங்களே மிகவும் பிரசித்தம். அவை, ஜாலந்திர பீட (ஜ்வலாமுகி) மும், ஒட்யாண பீட (ஜகந்நாத்) மும், காமராஜ பீட (சத்திய விரத க்ஷேத்திரம் என்னும் காஞ்சி) மும் ஆகும். இப்பீடங்களை ஹயக்கிரீவர், பிருகு முனிவர், வியாஸ முனிவர் முதலானோர் பூஜித்துப் பேறு பெற்றதைப் புராணங்கள் விவரிக்கும்.

இத்தகைய மகிமை பொருந்திய காமராஜ பீடத்தில் ஓங்கார கோணத்தில் பராசக்தி ஸ்ரீ காமாட்சி, பத்மாசனமிட்டு மோகன வடிவழகுடன் காட்சி அளிக்கிருள். மூல சக்தி, ஆதி சக்தி, ஆத்ம சக்தியாகி விளங்குகிருள் அம்பிகை. சந்திர சூடாமணியாகிய அவள் கிரீடம் ஜொலிக்கிறது. பாசம், அங்குசம், கோதண்டம், பஞ்சபாணம் முதலியவைகளைத் தம் திருக்கரங்களில் தாங்கி நிற்கிருள். இரு செவிகளிலும் சூரியர் சந்திரர் ஒளி வீசவும், சகல சௌபாக்கியங்களையும் தரவல்ல திரு மாங்கல்யம் கண்டத்தில் திகழ்ந்து ஒளிரவும், மணம் பரப்பும் மலர் மாலைகள் அசையவும் ஆகிய நிலையில், கருணைக் கடலென அருள் பாலிக்கும் அம்பிகையை நினைந்து, கிளி உருவில் தேவர்கள் தவம் செய்கின்றனர்.

ஆவிர்ப்பவம்:

அத்தவத்திற்கு மெச்சி மகிழ்ந்தவளாய், அவர்தம் இடையூறு களைய பிரளய காலாக்கினியாய் ஸ்ரீ அம்பிகை

தோன்றுகிருள். அப்போது அவளுக்கு பதினெண் ஆயுதங்களோடு கூடிய பதினெண் புஜங்கள் இருக்கின்றன. அத்தகு சொரூபத்துடன், 'துண்' ணைனப் போந்து, டந்தகாசூரன் என்னும் அசுரனைக் கொன்று, வெற்றிப் பெருமிதத்துடன் ஐந்து வயதுடைய கன்னிகையாய்பீடத்தின் பிலத் துவாரத்திற்கு மீள்கிருள். அத்தருணம் சூரியோதய காலம். துந்துபி, சங்கம், பேரிகை, படகம், காகளம், புல்லாங் குழல், தாளம், வீணை, மத்தளம் முதலிய தேவ வாத்தியங்கள் முழங்குகின்றன. அவ்வமயம் வியந்த நிலையில் இருந்த தேவர்கள், அம்பிகையின் விருப்பிற்கிசைந்து புனிதம் பொருந்திய காயத்திரி மண்டபத்தில் பிரணவத்தை சிங்காசனமாக அமைக்கிருர்கள். அப்பீடத்தின் மீது கன்னிகையாகிய அம்பிகையைப் போல பிம்ப பிரதிஷ்டை செய்து, ஷடாதாரங்களில் காணப்படும் ஷட்தரிசன சொரூபிணியாய், நவாவரண மத்தியிலிருப்பவளாய் விளங்கும் சக்தியை, 'ஷடாம் நாயம்' என்கிற மந்திர முறையால் அருச்சித்து, பஞ்சோப சாரங்களால் ஆராதித்து ஸ்ரீ வித்யா மந்திரங்களை ஜெபித்து, சூரியோதய காலத்தில் கதவைத் திறந்து பார்த்த தேவர்கள் அதிசயிக்கும் வண்ணம், பிரதிஷ்டை செய்த பிம்பத்தில் ஸ்ரீ அம்பிகை நிஜ உருவுடன் ஆவிர்ப்பவித்து காட்சி தருகிருள்.

அம்பிகை ஆவிர்ப்பவித்த அந்தக்காலம்: சாவித்திரி கல்பம்; சுவாயம்பு மனுவினுடைய தாமஸ காலம்; கிருதயுக ஆரம்பம்; விஷ்ணு, மோகினி உருவம் கொண்ட சமயம்; ஸ்ரீமுக வருடம்; சூரியன் கும்பத்தில்இருக்கிற பால் குணமென்கிற பங்குனிமாதம்; கிருஷ்ண பட்சம், பிரதமை திதி, பூர நட்சத்திரத்தின் மத்திய காலம், ஐந்தாம் ஜாமம், சுக்கிரவார உதய காலமாகிய சுபதினம் ஆகும்.

அம்பிகை அறம் வளர்த்தமை

பராசக்தி இக்கோயிலில் மூன்று வித கோலத்துடன் அருள் பாலிக்கிறுள். உலக உயிர்களுக்கு வேண்டிய போக போக்கியங்களைத் தர **ஸ்வர்ண காமாட்சி** யாகவும், நல்லொழுக்கம் முதலான தவ நெறிகளைக் காட்டி மலபரி பாகத்தை உயிரினம் பெற **தபஸ் காமாட்சி** யாகவும், பின்னர் மெய்ஞானச் சுடர் விளக்கும் சத்திநி பாதம் பெற **திரிபுராம்பிகை** யாகவும் திகழ்கிறுள்.

அட்சய பாத்திரத்தின் உதவியால் மணிமேகலை அறம் வளர்த்த இவ்விடத்தில், அம்பிகையும் ஒரு சமயம் ஏகாம்பர நாதரிடமிருந்து இரு நாழி நெல் பெற்று, முப்பத்து இரண்டு அறங்களை வளர்த்ததாக வரலாறு கூறுகிறது. அது வருமாறு:

'எண்ணரும் பெருவரங்கள் முன்பெற்றங் (கு)
எம்பிராட்டி தம் பிரான் மகிழ்ந்தருள
மண்ணின் மேல்வழிபாடு செய்தருளி
மனையறம் பெருக்கும் கருணையினுல்
நண்ணு மன்னுயிர் யாவையும் பல்க
நாடு காதலின் நீடிய வாழ்க்கைப்
புண்ணியத் திருக்காமக் கோட்டத்துப்
பொலிய முப்பதோ டிரண்டறம் புரக்கும்'

—என்ற பெரியபுராண அடிகளால் இனிது உணரப் பெறும்.

சரித்திரச் சான்றுகள்:

கரிகாலன் என்னும் திருமாவளவன் (கி. மு. 60 முதல் கி. மு. 20க்கு உட்பட்ட காலம் என்பர் ஆராய்ச்சியாளர்.) செரு படையுடன் இமயம் செல்ல நேருகிறது. இடையில் ஒரு வேடன் மூலம் காஞ்சியின் பெருமை கேட்டுப் பூரித்துப் போகிறுன். காஞ்சியைத் தனதாக்கி, நான்கு காத தூரமுள்ள

சுற்றெல்லை யுடைய எழில் நகராக்கி; குன்றனைய மதில்களை எழுப்பி, அதில் பல்வகைப் பட்ட மக்களையும் குடியேற்று கிருன். அதன் பின்னர், சாத்தன் அருளால் காஞ்சியில் செண்டு பெற்ற கரி காலன், இமயத்தை வென்று செண்டால் அடித்துப் புலிக்கொடி பொறிக்கிருன் என்பது செய்தி. அதனை,

'கச்சிவளைக் கைச்சி காமகோட் டங்காவல்
மெச்சி இனி திருக்கும் மெய்ச்சாத்தன்—கைச் செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு'

—என்ற சிலப்பதிகாரம் இந்திரவிழா வூரடுத்த காதை உரை மேற்கோள் செய்யுளால் நன்கறியலாம்.

ஹரிஹரன் என்ற விஜய நகர மன்னன் (கி. பி. 1392) காலத்தில், சாலிவாகன சகம் 1315-ல் இக்கோயிலின் கருப்பக் கிருக விமானத்திற்கு தங்கத் தகடு வேய்ந்து கும்பாபிடேகம் நடைபெற்றதாக தொல்பொருள் இலாகா வினர் சேகரித்துள்ள கல்வெட்டுக்களினின்று தெரிய வருகிறது. அச்சுத தேவராயர் என்ற விஜய நகர அரசர் (கி. பி. 1554) காலத்திய கல்வெட்டுகளும் இங்கு காணக் கிடக்கின்றன. அவை மூலம் கோயிலுக் கென்று கிராம தானங்கள் விடப்பட்ட செய்திகளை அறியலாம். மற்றும் சோழர் காலக் கல்வெட்டுகளும் உள்ளன. நந்திவர்மன், சம்புராயர் முதலிய அரசர்கள் காலக் கல்வெட்டுக்களும் இக்கோயிலின் பழஞ் செய்திகளைப் பறையறைகின்றன.

ஆதியில் இக்கோயிலில் தாந்திரிகர்கள் இருந்ததாகத் தெரிய வருகிறது. அத்வைத மதத்தை இந்தியாவின் பல இடங்களிலும் பரப்பிய ஸ்ரீ சங்கரர், பிற மதத்தவர்களை வாதில் வென்று காஞ்சியை யடைந்து, சர்வக்ஞ பீடமேறி

காம கோடி பீடத்தை ஸ்தாபித்தார். இங்கு அஷ்ட லட்சுமிகள் கொண்ட யந்திரத்தை பிரதிஷ்டை செய்தார். இப்போது நிகழும் பூஜை எல்லாம் அதற்குத்தான்; அம்மனுக்கு அல்ல. காஞ்சிக் கோயில்கள் அனைத்தினும் அம்மனுக்குத் தனி சந்நிதி இல்லை. காரணம் ஸ்ரீகாமாட்சியே எல்லாக் கோயில்களிலுமுள்ள சக்திகளையெல்லாம் தன்னுள் அடக்கிக்கொண்டு இலங்குகிறாள் என்பர். பிறகோயில் உற்சவமூர்த்திகள் ஸ்ரீ காமாட்சி கோயிலை வலம் வருதல், அதன் சிறப்பை மேலும் புலப்படுத்துவதாக அமையும்.

இலட்சுமி சுய உருவம் பெற்றதும், ஹயக்கிரீவர் விஷ்ணுமுகம் பெற்றதும், பூர்வம் எட்டாவதான மனுச்சக்கிர வர்த்தி சகல கலா ஞானம் பெற்றதும், தசரதர் பிள்ளைப் பேறு பெற்றதும், கணபதி துண்டீர மகாராஜனாகித் துதிக்கப் பெற்றதும், காந்தாரன், உருத்திரன் முதலானோர் துதிக்கப் பெற்றதுமான இப் புனிதத்தலத்தில், ஆதிசேஷன், துர்வாசர், சரஸ்வதி, அன்னபூரணி, கள்ளர் பெருமாள் (திருமங்கை ஆழ்வாரின் மங்களாசாசனம் பெற்றது.) சாஸ்தா, மகிஷாசுர மர்த்தனி, கால பைரவர் ஆகியோரைத் தரிசித்து விட்டு, தூய வுள்ளத்துடனும் தெய்வீக உணர்வுடனும் திரும்புவோமாக.

51

★ கணேஷ் டிலைட் மின்விசிறிகள்
(செங்கற்பட்டு ஜில்லா வினியோகஸ்தர்கள்)

★ மெர்ரிட் தையல் மிஷின்கள்
மற்றும் எலக்ட்ரிக் உபகரணங்கள் (சிங்கர் சூயிங் மெஷின் கம்பெனியாரின் அத்தாட்சி பெற்ற வியாபாரிகள்)

★ குரோம் லைட்
ஸ்டீல் பர்னீச்சர்கள்

★ எலக்ட்ரிக்
உபகரணங்கள்

★ தையல் மிஷின்
தனி பாகங்கள்
முதலியவற்றிற்கு நம்பிக்கைக்கும் நேர்மைக்கும் சிறந்த இடம்:

அரசூஸ் ஏஜென்ஸீஸ்,
(ஸ்டேட் பாங்கு எதிரில்)
544, காந்திரோடு, காஞ்சிபுரம்.

உங்கள் தேவைக்கு அணுகவும்!
உங்கள் திருப்தி எங்கள் சேவை!!

உ

சிவமயம்

ஏகம்பர் லாட்ஜ்

(வீரபத்திரர் கோயிலுக்கு
அண்மையிலும், பஸ் நிலையத்திற்கு
அருகாமையிலும்)

தங்குவதற்கு வசதியான இடம்

1-C, நெல்லுக்காரத் தெரு, — காஞ்சிபுரம்.

Phone: 129

Manufacturers of Electrical
line Materials & Steel
Metal Specialists.

Krishna Engineering Works, (Kanchee)

KANCHEEPURAM.

53

அம்பிகை வழிபட்ட

ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோயில்*

ஸ்ரீ கயிலயங்கிரியில் அன்ருேர் நாள் நினேக்காத சம்பவம் நிகழ்கிறது; எதிர்பாராத நிகழ்ச்சி ஏற்படுகிறது. ஆம்! சக்திகளின் தலேயாய தெய்வமாகிய கவுரிக்கு அர்த்தாசனம் ஈந்து, போக மூர்த்தியாய்ப் பரமேசுவரன் வீற்றிருக்கும் அவ்வேளேயில்தான் அந்தச் சம்பவம் நிகழ்கிறது.

இத்திவ்வியத் திருக்கோலம், சக்தி கோடிகளின் உள்ளங்களில் பொருமைத்தீயை மூட்டுகிறது. 'எங்களுக்கும் சமாசனம் வேண்டும்' -என்றுப் பொருமுகின்றன. முறுவலிக்கிருர் மகேசுவரன்; சக்திகளின் செருக்கழியச் செய்கிருர். பார்க்கிருள் கவுரியன்னே; சக்திகளின் மானம் காக்க, நாயகரது நயனங்களே நயமாகப் பொத்துகிருள்; அதுவும் ஒரு முகூர்த்த காலம் தான்!

அவ்வமயம் உலகம் திடீரென்று எவ்வித இயக்கமுமற்று காண்கிறது. ஒளி வெள்ளத்தைப் பாய விட்ட சூரிய சந்திரர், ஒளி குன்றி ஒடுங்குகின்றனர். எங்கும் ஏக இருள் மயம்.

---

*22—3—'64 தேதிய தினமணி சுடரில் உத்திர விழாவை முன்னிட்டு வெளியான கட்டுரை.

அந்நிலையில், அதர்மம் அத்து மீறுகிறது. அத்தனைப் பாவங்களும் கருமை நிறம் தாங்கி வருகின்றன. பட்டொளி வீசும் பார்வதியின் திருமேனியைப் பார்க்க வொண்ணுக் கருநிற மாக்குகின்றன. காரணத்தைக் கண்டறிகிருள் அவள். கண் மூடிய குற்றம் அல்லவோ செய்தாள்!

அன்ன பூரணி

சரணுகத வத்சலனுகிய சங்கரரின் ஆணைக்கிணங்க, பதரிகாசிரமத்தில் கார்த்தியாயன முனிபுங்கவருக்குக் குழந்தையாய் அவதாரம் செய்கிருள் அம்பிகை. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த அக் குழந்தைக்கு எட்டு வயது நிறைகிறது. அத்தருணம், யோகதண்டம், ஜெபமாலை, தீப ஸ்தம்பம், இரண்டு குடம், இரண்டு சாமரை, வித்யாதாரம், வியாக்ராசனம், புத்தகம், வறுத்த பயறு, கங்கை மணல், கங்கா தீர்த்தம், குடை இன்ன பிற ஆயுதங்களை உவந்து பெற்ற பின்னர், காசிநகர் ஏகுகிருள். அங்கு வாட்டி நின்ற வறுமையை அன்னத்தால் போக்கி, 'அன்னபூரணி' என்று பெயர் பெறுகிருள். காசி ராஜனுக்கு மோட்சம் அளித்து, பன்னிரண்டு வருட காலம் பலரும் புகழும் வண்ணம் மக்களுக்குக் கருணை புரிந்து, பின் தென்திசை நாடி வருகிருள்.

அன்னைக்குப் பொன்னிறம் ஈந்த காஞ்சி

அவளிடமிருந்த பொருள்கள் அனைத்தும், காஞ்சி மண்ணை மிதித்ததும் மாற்றத்தை அடைகின்றன. புலித் தோல் சோம விருத்தமாகிறது. குடம் ஆதார பீட சூத்திர மாகிறது. கங்கை மணல் இலிங்கமாகிறது. உருத்திராக்கம் வில்வமாலை யாகிறது. இன்னொரு குடம் நாகாபரணமாகவும், யோகதண்டம் திரிசூலமாகவும், சாமரைகள் இரண்டும்

பெண்களாகவும் மாறுகின்றன. விசிறி கிளியாகிறது. குடம், குடதீபமாகிறது. புத்தகம் காமதேனுவாகிறது. வீத்தியாதாரம் ஊசியாகவும், வறுத்த பயறு முளேயோடு கூடியதாகவும், கங்கை பாலாகவும் காண்கிறது. அக்கணம் அவள் அடைந்த மகிழ்ச்சியை அளவிட்டுக் கூறுவார் யார்!

'இவ்விடமே மகேசுவரனைப் பூஜித்துத் தவம் நோற்கும் நோன்பினைக் கொள்ளும் நல்லிடம்'—எனத் திருவுளம் பற்றுகிருள் அம்பிகை. அதனுல் அவள், பூசனைச் செய்கிருள்.

அம்பிகையின் அருந்தவம்

சோமசூத்திரம் பொருந்திய அந்த இலிங்கத்துக்கு பாலாபிஷேகம் செய்து, நாகாபரணத்தில் எழுந்தருளச் செய்கிருள். வில்வமாலே சாற்றி, முளேத்த பயறு படைக்கப் படுகிறது. அதுவே அவள் நிகழ்த்தும் பூசனை. அதை முடித்து, தவம் நோற்கிருள்.

காவலுக்கு இரண்டு சக்திகளே நிறுத்துகிருள். கிளியைக் கையில் தாங்கி, பஞ்சாக்கினியை வளர்த்தி, ஊசி முனையில் நின்று பன்னுள் கடுந்தவம் புரிகிருள்.

நெடிய தவத்தைப் பார்க்கிருர் நாரதமுனிவர். பெருங் கருணைகொண்டு, பஞ்ச பாண மந்திரத்தை உபதேசிக்கிருர். அதுகேட்டு மகிழ்வெய்திய அன்னை, தமது பூரம் என்ற ஜன்ம நட்சத்திரத்தில் அம்மந்திரத்தை ஜபிக்கத் தொடங்குகிருள்.

மகா பிரளய பந்தினி

காலம் கரைகிறது; கடுந்தவம் பலிக்கிறது. தவவலி பரமேசுவரனைத் தாக்குகிறது.

உடனே பரமனின் ஜடாமுடியினின்று கங்கை, கனன்று வருகிறாள்; மகா பிரளய ரூபிணியாய்ப் பெருக்கெடுத்துப் பேரொலியுடன் வருகிறாள். அதனை அம்பிகையின் பெண் சக்திகளுள் ஒன்று, விசுவபட்சணம் என்கிற தம் கபாலத்தினுள் அடக்குகிறது. அந்த சக்தியே, 'மகாபிரளய பந்தினி' என்றும், 'பிரளயம் காத்தாள்' என்றும் அம்பிகையால் பாராட்டப்படுகிறாள். அவளுக்குத் தனி சந்நிதி உள்ளது.

தழுவக் குழைந்த நாதர்

காலச் சக்கரம் சுழலுகிறது. பிரளய பந்தினியின் கபாலத்தினுள் அடங்கி இருந்த வெள்ளம், வெகுண்டு எழுகிறது. ஆர்த்தெழும் வெள்ளத்தை அடக்குவார் யார்? அவன்தானே! அதனால் அவனை நினைத்து, 'அபயம் அபயம்' என அஞ்சியவளாய் இலிங்கத்தை மார்பிறுகத் தழுவுகிறாள் அம்பிகை. அவள் முலைத்தழும்பும் வளைத்தழும்பும் தமது திருமேனியில் பதிந்த நிலையில் காட்சிதரும் அவரே, 'தழுவக் குழைந்த நாதர்' எனப்பெயர் பெறுகிறார்.

பங்குனி உத்திரத் திருவிழா

அக்கணமே தேவியின் திருமேனி 'தக தக' வென ஜொலிக்கிறது. பொன்னிறம் பெற்று ஒளிர்கிறது. சிவகணங்களும் ரிஷிகளும் சர்வேசுவரனின் திருக்கல்யாண கோலத்தைக் காண விழைகின்றனர். முன்பொரு சமயம், அகத்திய மாமுனிவருக்குக் கல்யாண கோல தரிசனம் தருவதாக வாக்களித்து இருக்கிறார் அல்லவா?

அந்நிலையில் எக்காள ஒலிகேட்கிறது. தேவ வாத்தியங்களின் முழக்கம் எங்கணும் பரவுகிறது. ஒன்பது நாட்களிலும் முறையான விழாக்கோலம் நிகழ்கிறது. பத்தாம் நாள் பங்குனி உத்திர தினம். ஏகாம்பரநாதரும் எம்பிராட்டியும் மகாவிஷ்ணுவால் அழைத்துவரப்படுகிறார்கள்.

கல்யாண மண்டபத்தில் எழுந்தருளியதும், இலட்சுமி க்ஷீரபானம் சொரிய, விஷ்ணுவானவர் ஏகாம்பரருடைய திருவடி விளக்குகிறார்.

பிறகு ஏகாம்பரர் திருக்கரத்தின் மீது அன்னை கவுரியின் திருக்கரத்தை வைத்து மந்திரநீர் வார்த்து தத்தம் செய்கிறார், மகாவிஷ்ணு. இதுவே பங்குனி உத்திர ஐதீகம்.

மாவடி மகிமை

காசினியோர் ஏத்துகின்ற கச்சியம்பதியில்—கம்பாநதி தீரத்தில்—ஒற்றை மாவடியின் கீழ் அம்பிகையோடு சமா சனத்தில் வீற்றிருக்கும் ஏகாம்பரரைக் காணக் கண் கோடி வேண்டுமே! ஏகம்—ஒன்று; ஆம்ப்ரம்—மாமரம். சிரஞ்சீவி யாகிய மார்க்கண்டேய முனிவரை பிரளய காலத்தில் காத்தல் வேண்டி, சிவசொரூபமே மாவிருட்சமாகத் தோன்றியதாக வும், நான்கு வேதங்களே நான்கு கிளைகளாகக் கிளர்ந்த தாகவும் கூறுவர். உருத்திரசாலை, உருத்திரகோடி, கயிலாயம், ஏகாம்பரம், மகாஸ்மசானம் எனப் பல பெயரிட்டு இத்தலம் அழைக்கப்பெறும்.

இலக்கியக் குறிப்புகள்

காஞ்சியைத் தனதாக்கி அரசோச்சிய மகேந்திர வர்ம பல்லவன் (கி. பி. 615—630) அறிவும் திருவும் அமையப் பெற்றவன். அவன் யாத்த மத்த விலாஸ பிரஹசனம் என்ற ஒரு நகைச் சுவை நாடக நூலில், இத்தலம் குறிக்கப் படுகிறது. மாவடியும், கபாலிகர்கள் வாழ்ந்த செய்தியும் பேசப்படுகிறது. அவர் காலத்தில் வாழ்ந்த அப்பரும், கச்சி ஏகம்பரையும் திருமேற்றளீசரையும் பாடியிருத்தல் கோயிலின் பழைமைக்கோர் எடுத்துக்காட்டு ஆகும். திருஞான சம்பந்தர், மணிவாசகர், ஐயடிகள் காடவர் கோன் முதலா னோரின் பாடல்களும் இத்தலத்திற்கு உண்டு.

பட்டினத்தடிகள் காஞ்சியில் பல நாட்கள் இருந்து, ‘ஏகம்பமாலை’ பாடி இருக்கிறார். இடை யிடையே, ‘ஏனிருந்தாய் இறைவா!’, ‘ஏன் படைத்தாய் இறைவா!’—என்றெல்லாம் இழிவு சிறப்பு (நிந்தாத்துதி) செய்து பாடுகிறார்.

‘எத்தனையூர் எத்தனைவீ டெத்தனைதாய் பெற்றவர்கள்
எத்தனைபே ரிட்டழைக்க வேனென்றேன்—நித்தம்
எனக்குக் களையாற்ற ஏகம்பா கம்பா
உனக்குத் திருவிளை யாட்டோ!’

—என்று உரிமையோடு வினவுகிறார் பட்டினத்தார். அம்மட்டோ! திருவொற்றியூரில் சபதம் பிழைத்த காரணத்தால் கண் இழந்த சுந்தரர், ‘ஆலந்தான் உகந்து அமுது செய்தானை, ஆதியை....’என்று நைந்துருகிப்பாடி, இடக்கண் பெறுகிறார் இங்கே!

‘என்னெஞ்சே! உன்னை இரந்தும் உரைக்கின்றேன்
கன்னஞ்செய் வாயாகிற் காலத்தால்—வன்னெஞ்சேய்
மாகம் பத்தானை உரித்தானை வண்கச்சி
ஏகம் பத்தானை இறைஞ்சு’

—என்ற க்ஷேத்திர வெண்பாப் பாடலை (11-ம் திருமுறை) நாமும் ஒரு முறைப் பாடுவோம்.

கோயில் திருப்பணிகள்

சுமார் முப்பது ஏகர் விஸ்தீரணமும் ஐந்து பிரகாரங்களும் கொண்டு விளங்கும் இக்கோயிலின் கட்டட அமைப்பு கண்டு இன்புறற்பாலது. பல்லவர், சோழர், விஜய நகர அரசர் முதலிய பல்வேறு அரசர்கள் அவ்வக் காலங்களில் திருப் பணிகள் செய்திருக்கிறார்கள். முதல் ராஜாதி ராஜனின் 27-ம் ஆண்டு ஆட்சிக் காலக் கல்வெட்டுகள், அவனது மெய்க் கீர்த்திகளையும், மாசி விழாவிற்காக ஐந்து கழஞ்சு பொன்

விட்ட தானத்தையும் பேசுகின்றன. முதல் குலோத்துங் கனின் (கி. பி. 1070—1120) 6-ம் ஆண்டு ஆட்சிக் காலக் கல்வெட்டுக்களினின்று, உத்தர அயனத்திற்காக விட்ட தானத்தை (அன்ருடு நற்காசு 108) நன்கறியலாம். இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133—1150), இரண்டாம் ராஜ ராஜன் (கி. பி. 1146—1173), மூன்ரும் குலோத்துங்கன் (கி. பி. 1178—1281), பின்னர் வந்த விஜய நகர அரசர்களான புக்கராயர், கணபதி தேவன், விஜய கண்ட கோபால தேவன், கம்பண உடையார், அவர் மனைவி இராம தேவி அவ்வையார் (அம்மையார்) முதலானோரின் கல்வெட்டு களும் காணக்கிடக்கின்றன.

பத்து நிலைகளையும் 540 திட்டுகளையும் உடைய 188 அடி உயரமுள்ள பிரமாண்டமான முன் கோபுரம், கிருஷ்ண தேவராயரால் (கி. பி. 1509—1530) கட்டப்பட்டது. பின்னர் அச்சுதராயர் கி. பி. 1534ல் வரதர் ஏகாம்பரர் கோயில்களுக்குச் சில கிராமங்களைச் சமபாகமாகப் பகிர்ந் தளித்தார். இவர்கள் காலத்துக் கைவண்ணங்கள் கண் களுக்கு விருந்து அளிக்கின்றன. பாயும் புரவி, மனுச் சோழன் நீதி காத்தமை, மன்மதன் ரதி லீலை, வீரர்களின் வாட் போர்ப் பயிற்சி, மோகினி அவதாரம், சிவ கணங்கள், அரச முத்திரைகள், கோலாட்டம், நடனம் மற்றும் புராணக் கதைகளைச் சிற்பிகள் படம் பிடித்துக் காட்டி இருக்கிருர்கள். வள்ளல் பச்சையப்ப முதலியார், நாட்டுக் கோட்டைச் செட்டி மார் (1889), டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர் குடும்பத்தார் செய்த் திருப்பணிகளும், அளித்த ஆபரணங்களும் அனந்தம். காஞ்சியை—கச்சி ஏகம்பரை—அலங்கரித்த கரிகாற்சோழன் கைகூப்பித் தொழும் அமைப்போடு கூடிய உருவச் சிலையையும் இங்கே கண்டு இன்புற்றநிலையில், ஒரு மாவிற் பெருமான் புகழ் பாடித் திரும்புவோமாக!

★

162884

அ23:31·2112…

60

★ புதிய ஜவுளிக் கடை ★

கல்யாணம் மற்றும் பண்டிகைகளுக்குத் தேவையான
பட்டு, நூல் & மில் ஜவுளிகள் வாங்க
நம்பிக்கையான இடம்:

கற்பகம் & கோ.,

பட்டு, நூல் & மில் ஜவுளி வியாபாரம்,

177, காந்தி ரோடு, :: காஞ்சிபுரம்.

குறிப்பு: மில் ஜவுளிகள் முத்திரையிடப்பட்ட விலைக்கும், பட்டுசேலைகள் தயாரிப்பு விலைக்கும் கிடைக்கும். ஒருமுறை விஜயம்செய்து திருப்தி அடையுங்கள்.

பீக்கோ, ஜி. இ. சி., கிராம்டன், பி. எஸ் ஜி., மோட்டார்களும், சிலிப்பிரிங், ஸ்சுரல்கேஜ் மற்றும் எல்லாவிதமான மோட்டார்களும், ஸ்ரீராம், சுப்பையா, தண்டபாணி, பி. எஸ். ஜி., பம்புகளும், ஸ்டார்ட்டர், சுவிட்ச் ஒயர்கள் மற்றும் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும், பால் பேரிங்குகள், பைப்பு, பைப்ஸ் பிட்டிங்குகள், வீட்டிற்கும் ஒட்டலுக்கும் பயன்படும் மாவு அரைக்கும் ஆட்டுக்கல் (மின்சார மோட்டாருடன்), சிங்கில் பேஸ் மோட்டார் பம்புகள் யாவும் மிக மலிவான விலையில் கிடைக்கும் இடம்:

சாந்தி எலக்டிரிகல்ஸ்,

3-B, மேட்டுத் தெரு, :: காஞ்சிபுரம்.

(பிராஞ்சு: 315, தம்புசெட்டித் தெரு, சென்னை-1.)

உ

தந்தி: கேயெம்சி KMC போன்:

K. M. C. ஸ்டீல் பர்னீச்சர் அவுஸ்,

உரிமையாளர்: K. M. C. முனுசாமி நாயகர்,

502, காந்திரோடு, :: காஞ்சிபுரம்.



எங்களிடத்தில் உறுதியான ஸ்டீலில் செய்யப்பட்ட ட்யூபுலர், போல்டிங் சேர்கள், மேஜைகள், பீரோக்கள், ஈஸி சேர்கள், கட்டில்கள், சோபா செட்டுகள், குழந்தை தொட்டில்கள் முதலிய ஸ்டீல் பர்னீச்சர்கள் கிடைக்கும்.

அன்பர்கள் நமது ஷோரூமுக்கு விஜயம் செய்து ஆதரவு தர வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

PHONE: 53

S. PRAKASAM & SONS

SILKS & SAREES

METTU STREET,
KANCHEEPURAM.

பத்மா பிரஸ் (போன் 61) காஞ்சிபுரம்